வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 04 | 12.01.2023 வியாழக்கிழமை | இதழ் : 34 | பக்கங்கள் : 16




# தமிழரசு வெளியேறிய பின்னர் கூட்டமைப்பு பலமடைந்துள்ளது

## ரெலோ கட்சியின் செல்வம் அடைக்கலநாதன்



- சுழற்சி முறையில் தலைமை
- பொதுச் சின்னத்தில் போட்டி
- த. தே. கூ. பதிவு செய்யப்படும்

வவுனியா, ஜனவரி 12

**தமிழரசுக் கட்சி வெளியேறினாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியவர்கள் மீள இணைந்துள்ளமையால் இந்த கூட்டு பலமடைந்துள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்த கூட்டில் இணைய வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சுழற்சி முறையில் தலைமைத்துவம் பேணப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பதிவு செய்யப்படும். பொது சின்னம் தெரிவு செய்யப்படும் - அதிலேயே போட்டியிடுவோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) பணிமனையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி என்பது உங்களுக்கு தெரியும். இறுதியாக மூன்று கட்சிகள் கூட்டமைப்பில் இணைந்து பயணித்தன. எங்களைப் பொறுத்த மட்டில் நானும், சித்தார்த்தனும் கட்சி ரீதியாக தமிழரசுக் கட்சிக்கு கடிதம் எழுதினோம். ஏனைய கட்சிகளையும் அரவணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி, அதனூடாக நாங்கள் எல்லோருக்கும் வலுவான ஒற்றுமையாக இருப்பதாக காட்ட முடியும்.

மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க முடியும். நாங்கள் 6 கட்சிகள் ஐ. நா. சபைக்கு கடிதம் எழுதி

15

# மகிந்த, கோட்டாபயவுக்கு தடை; விளக்கம் கோர கனடிய தூதுவருக்கு

## வெளிவிவகார அமைச்சு அழைப்பு!

கொழும்பு, ஜன. 12

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடைகள் தொடர்பில் விளக்கம் கோருவதற்காக கனடிய தூதுவர் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய , முன்னாள் பிரதமர் மகிந்த, சுனில் ரத்நாயக்க மற்றும் லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாரச்சி உள்ளிட்டவர்கள்

15

# கனடாவின் தடை நடவடிக்கை இலங்கையை ஓரங்கட்டுகிறது!

## வெளிவிவகார அமைச்சர் சீற்றம்

கொழும்பு, ஜன. 12

முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த, கோட்டாபய மீது கனடா தடை விதித்த நடவடிக்கையானது தற்போதைய சந்தர்ப்பத்தில் உதவியற்றதும் இலங்கையிலுள்ள சமூகத்தினரை ஓரங்கட்டுவதைப் போன்ற செயல்பாடுமாகும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி ஷப்ரி கூறியுள்ளார்.

நேற்றைய தினம் கனடா தூதுவர் எரிக் வால்ஷை அமைச்சுக்கு அழைத்த வெளிவிவகார அமைச்சர் தனது அதிருப்தியை மேற்கண்டவாறு வெளிப்படுத்தியிருந்தார்.

மனித உரிமை மீறல்களை அடிப்

15

# மந்தபோசணைப் பாதிப்பு சிறுவரிடையே திடீர் உயர்வு

கொழும்பு, ஜன. 12

பொருளாதார நெருக்கடி காரணமாக உணவு பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் மந்த போசாணையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையில் சடுதியாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சித்ரா மாலினி டி சில்வா தெரிவித்தார்.

15

# அரசின் விசாரணை இரகசிய பட்டியலில் கோட்டாபயவும்!

## உண்மை மற்றும் நீதி திட்டம்



கேப்டவுன், ஜன. 12

அரசாங்க விசாரணையின் இரகசிய பட்டியலில் கோட்டாபய ராஜபக்ஷ சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளார் என்று புதிய அறிக்கை ஒன்று கூறுகின்றது. 1989ஆம் ஆண்டு மாத்தளையில் 700 சிங்களவர்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு தொடர்பிலேயே கோட்டாபயவின் பெயர் சேர்க்கப்பட்

15

# இந்த ஆண்டிலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியே!

## உலக வங்கி அறிக்கை

நியூயோர்க், ஜன. 12

நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டிலும் - 2023 இல் 4.3 வீதத்தால் மீண்டும் வீழ்ச்சியடையும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் குறித்த அறிக்கையிலேயே உலக வங்கி இதனை குறிப்பிட்டுள்ளது.

மேலும், உணவு மற்றும் எரிபொருளுக்கு செலுத்துவதற்கான அந்நிய செலாவணி இல்லாமல் போனதால் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததால் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன. இதன் காரணமாக இலங்கையின் உற்பத்தி 2022 இல்

15



# 13 கட்சிகள் ஒன்றாக இணைந்து சுதந்திர மக்கள் கூட்டணி உதயம்!

- மைத்திரி, விமல், டலஸ் இணைவு
- வடக்கு, கிழக்கிலும் போட்டியாம்

கொழும்பு, ஜன. 12

சிறீ லங்கா சுதந்திர கட்சி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை, விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா கூட்டமைப்பு உள்ளடங்கலாக 13 கட்சிகள் இணைந்து நேற்று ‘சுதந்திர மக்கள் கூட்டணி’ என்ற புதிய கூட்டணி உருவாகியுள்ளது.

ஹெலிகொப்டர் சின்னத்தை பொது சின்னமாக

15

# நடவடிக்கையில் இறங்கியது தேர்தல் ஆணைக்குழு!

கொழும்பு, ஜன. 12

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளார். தேர்தலுக்கான கட்டுப்பணத்தை பெற்றுக் கொள்வதை தவிர்க்குமாறு மாவட்ட செயலா

15

# தேர்தல் படிப்பினையின் பின் தொடர்ந்தும் பயணிப்போம்!

## சிறீதரன் எம். பி.

கிளிநொச்சி, ஜன. 12

“உள்ளூராட்சி மன்ற தேர்தல் கொடுக்கும் படிப்பினையை வைத்து தொடர்ந்தும் பயணிக்கலாம்”, என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சி உள்ளூராட்சி தேர்தலுக்கு கிளிநொச்சியின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று சபைகளுக்கும் நேற்று கட்டுப்பணத்தை செலுத்தியது. இதைத் தொடர்ந்து சி. சிறீதரன் எம். பி. தனது பணிமனையில் செய்தியாளர்களை சந்தித்தார்.

இதன்போ, கிளிநொச்சி மண்ணில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து தமிழரசு கட்சி அதே மாவட்டத்தில் தனியாக கட்டுப்பணம் செலுத்தியமை தொடர்பில் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதி

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

என்ன நடக்கக்கூடாது என்று தமிழ் மக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்களோ அது துரதிர்ஷ்டவசமாக நடந்து முடிந்திருக்கின்றது.

எந்தக் காரணத்துக்காக பிரிந்து கிடந்த அரசியல் கட்சிகளை எல்லாம் விடுதலைப் புலிகள் ஒன்றிணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்களோ அந்தக் காரணமும் - தேவையும் இப்போதும் இருக்கும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து போயிருகின்றது.

தந்தை செல்வாவும் ஜீ. ஜீ. பொன்னம்பலமும் தமிழ் அரசியலில் இரு துருவங்களாக செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், ஒற்றுமைப்படவேண்டிய நிலைமை வந்தபோது இருவரும் இணைந்து மலையகத்தின் தொண்டமானின் இ. தொ. காவையும் இணைத்துக்கொண்டு தமிழர் கூட்டணியை உருவாக்கினார்கள். பின்னர் அந்தக் கூட்டணி தமிழீழம் மட்டுமே வடக்கு - கிழக்கு தமிழர்களின் பிரச்னைக்கு ஒரே தீர்வு என்ற முடிவுக்கு வந்தபோது அதிலிருந்து தொண்டமான் விலக தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியது. அப்போது தமிழ் காங்கிரஸும் தமிழரசுக் கட்சியும் உறங்கு நிலைக்கு சென்றன.

நடந்துகொண்டிருக்கும் ஒரு வர்த்தக நிறுவனத்தை சில காலம் தொடர்ந்து நடத்த முடியாமல் போனால் அதனை மூடவேண்டியதில்லை. அதனை உறங்கு நிலையில் வைத்திருந்துவிட்டு தேவையான நேரத்தில் அதனை மீண்டும் நடத்தலாம். அதுபோலவே அந்த இரண்டு கட்சிகளும் உறங்கு நிலைக்கு சென்றன.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமாகிய சில மாதங்களில் அதாவது எழுபத்தியேழு பெப்ரவரியில் ஜீ. ஜீ. மரணமாக ஏப்ரல் மாதம் தந்தை செல்வா மரணமானார்.

இதனையடுத்து நடந்த பொதுத்தேர்தலில் தொகுதி ஒதுக்கீட்டில் முரண்பட்டுக்கொண்டு, ஜீ. ஜீயின் புதல்வர் குமார் பொன்னம்பலம் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து பிரிந்து சென்று மீண்டும் காங்கிரஸுக்கு உயிர்கொடுத்து தனியாகப் போட்டியிட்டார்.

ஆனால், தமிழரசு தொடர்ந்து உறங்கு நிலையிலேயே இருந்து வந்தது.

பின்னர் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தமிழர் அரசியல் இருந்தபோது, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அந்த ஒற்றுமை முயற்சிக்கு சில ஊடகவியலாளர்களும் கொழும்பிலிருந்த சில தமிழ் மக்கள் நலன்விரும்பிகளும் காரணமாக இருந்தனர். என்றாலும், அது புலிகளின் ஆசியுடனேயே நடந்தது என்பது இரகசியமானதல்ல.

ஆனால், இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு தேர்தலில் புலிகள் நேரடியாக கூட்டமைப்பின் மீதான தமது கட்டுப்பாடுகளை செலுத்த முன்வந்தபோது தமிழர் விடுதலை கூட்டணியின் கட்டுப்பாடு தொடர்பாக சம்பந்தனுக்கும் ஆனந்தசங்கரிக்கும் இடையே நடைபெற்ற இழுபறியில் அது சங்கரியின் கைகளுக்கு செல்ல, சங்கரியுடன் உடன்படாத கூட்டணிக்காரர்கள் அப்போது உறங்கு நிலையிலிருந்த தமிழரசை தூசுதட்டி எடுத்து கூட்டமைப்பில் இணைத்ததுடன், அதன் சின்னத்திலேயே கூட்டமைப்பு போட்டியிடுவது என்ற முடிவெடுத்தனர். இந்த முடிவின் பின்னால் புலிகளே இருந்தனர் என்பதும் தெரிந்ததுதான்.

அன்றிலிந்து இன்றுவரை கூட்டமைப்பு என்ற தமிழர் அரசியல் தலைமை தமிழரசின் ஆதிக்கத்தின் கீழேயே இருந்து வருகின்றது.

தாமே கூட்டமைப்பின் தலைமை என்பதுபோல தமிழரசு கடந்த காலங்களில் நடந்துகொண்டதும் அதிலும் முக்கியமாக ஒருசிலரின் தன்னிச்சையான முடிவுகளும் கூட்டமைப்பிலிருந்து காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எவ். என்று கட்சிகள் தொடர்ந்து வெளியேறக் காரணமாகின.

இவ்வாறு கட்சிகள் வெளியேறியமைக்கு அவரவர்களின் தனிப்பட்ட தேவைகளும் காரணமாக இருந்தன என்பதையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

இப்போது மூன்று கட்சி கூட்டணியாக மாறியிருந்த கூட்டமைப்பிலிருந்து தமிழரசு தனித்துப்போக முடிவெடுத்திருக்கின்றது. அவ்வாறு தமிழரசு முடிவெடுத்ததற்கும் அவர்களின் தனிப்பட்ட நலனே முக்கிய பங்காற்றியிருக்கின்றது என்பதும் இரகசியமானதல்ல.

இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து எம். பிக்களை கொண்டிருந்த கூட்டமைப்பு, பதினைந்தாம் ஆண்டு தேர்தலிலும் ஐந்து ஆசனங்களைக் கைப்பற்றியது. ஆனால், இருபதில் நடந்த தேர்தலில் மூன்று ஆசனங்களை மாத்திரமே கைப்பற்ற முடிந்தது. அதில் சிவஞானம் சிறீதரன் தனக்கிருக்கும் கிளிநொச்சி மாவட்ட ஆதரவை மூலதனமாகக்கொண்டு வெற்றிபெற புளொட்டின் சித்தார்த்தன் தனது தனிப்பட்ட ஆதரவில் வெற்றிபெற்றார்.

அடுத்த தேர்தலில் மூவர் கூட வெற்றிபெறுவார்களா என்ற நிச்சயமற்ற நிலைமையே இன்று இருக்கின்றது. இந்நிலையில், சித்தார்த்தன் தலைமையிலான புளொட் கட்சி தொடர்ந்து கூட்டமைப்பில் இடம்பெறுவது தமிழரசுக்காரர்களுக்கு மகிழ்ச்சிக்குரியது அல்ல என்பது அண்மைக்காலமாக அவர்களில் சிலரின் நடவடிக்கைகள் புலப்படுத்தி வந்தன. அண்மையில், தனது புலம்பெயர் நண்பர் ஒருவருடன் உரையாடிய கூட்டமைப்பு எம். பி. ஒருவர் அதாவது, தமிழரசின் எம். பி. ஒருவர் இதுகுறித்து பிரஸ்தாபித்திருந்தது பற்றி இந்த ஊர்க்குருவியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த தமிழரசு எம். பியின் புலம்பெயர் நண்பர் இந்த ஊர்க்குருவிக்கும் நண்பர் என்பதை அந்த எம். பி. அறிந்திருப்பாரோ தெரியவில்லை.

ஆக, ஒரு சிலரின் தனிப்பட்ட தேவை கருதி கூட்டமைப்பிலிருந்து தமிழரசு தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இனி ஒரு பாராளுமன்ற தேர்தல் நடந்தால் தமிழரசின் நிலை எப்படி இருக்கும் என்பதற்கு இப்போது ஆரூடம் சொல்ல முடியாது தானே.!

**- ஊர்க்குருவி**

# பொதுநிர்வாக அமைச்சின் செயலர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்!

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜன. 12

பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அரசமைப்புக்கு முரணாக நியாயமற்ற முறையில் தனது அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளார். அவர் இழைத்துள்ள தவறை சாதாரணமானதாகக் கருத முடியாது. இவருக்கு எதிராக அரசமைப்புக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை பொறுப்பேற்பதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் சுற்று நிருபம் வெளியிடப்பட்டு, பின்னர் அது இரத்து செய்யப்பட்டமை தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே பவ்ரல் அமைப்பு இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

‘தேர்தல் ஆணைக்குழு, அதற்கு அரசமைப்பு ரீதியாகவும், உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் ஊடாகவும் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அத்தோடு அது தொடர்பான சட்டத்தின் உறுப்புரைக்கு அமைய தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அரசமைப்பின் 104 - 4 (ஆ) உறுப்புரைக்கு அமைய சகல அரச உத்தியோகத்தர்கள், சட்ட ரீதியான அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளும் தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய செயல்பட வேண்டும்.

எந்தவொரு நியாயமான காரணிகளும் இன்றி தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைகளை உதாசீனப்படுத்துதல் , அதற்கமைய செயற்படாமலிருத்தல் என்பன 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ஒரு இலட்சம் ரூபாய்க்கு குறையாத தண்டப்பணம் அல்லது இந்த இரு தண்டனைகளுக்கும் உட்படக் கூடிய குற்றமாகும் என அரசமைப்பின் 104 உப பிரிவு 1 ஆ உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலுக்குள் பொது நிர்வாகத்தின் சிரேஷ்ட உயரதிகாரியான பொது நிர்வாகம், மாகாணசபை, உள்ளூராட்சிமன்ற அமைச்சின் செயலாளரால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை பொறுப்பேற்க வேண்டாம் என சகல மாவட்ட செயலாளர்களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டமையானது அரசியலமைப்பு மீறலாகும்.

பொது நிர்வாக செயற்பாடுகளின் போது மாவட்ட செயலாளர்கள் , பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட சகல நிர்வாகங்களுக்கும் தலைமைத்துவத்தை வழங்கும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் இவ்வாறானதொரு தவறை இழைத்துள்ளமையை இலகுவாகக் கருத முடியாது.

குறிப்பாக மக்களின் ஜனநாயக உரிமைகள் உபயோகிக்கப்படும் தேர்தலொன்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் நிர்வாக அதிகாரியொருவர் இவ்வாறானதொரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளமையானது ஒட்டுமொத்த அரச சேவைக்கும் அவமரியாதையாகும் என்பதோடு, அது எதிர்காலத்திற்கு தவறானதொரு முன்னுதாரணமாக அமைகின்றது.

தமது உயர் அதிகாரிகள் தவறான ஆலோசனைகளை வழங்குகின்றனர் என்றால் அல்லது அரசியலமைப்பிற்கு முரணான ஆலோசனைகளை வழங்குகின்றனர் என்றால் அதற்கு எதிராக நிர்வாக சேவையில் உயர் அதிகாரி என்ற ரீதியில் அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உங்களது கட்டளைகளுக்கு எதிராக செயற்படுமாறு நியாயமான காரணிகள் இன்றி தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த குறித்த அமைச்சின் செயலாளர் தொடர்பில் அரசியலமைப்பிற்கமைய உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களிடம் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்களின் இந்த வேண்டுகோள் தனிப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையது அல்ல என்றும், இந்த நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும், தேர்தல் ஆணையகத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், அரச அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்படுவதற்குத் தேவையான சூழலை உருவாக்க வேண்டும் என்பதற்காகவுமே என்பதை வலியுறுத்துகின்றோம். இது தொடர்பில் நீங்கள் எடுக்கும் தீர்மானங்கள் இந்நாட்டின் ஜனநாயகத்திற்கு ஒரு திருப்புமுனையாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘பயங்கரவாதி’ நாவல் வெளியீடு!

கிளிநொச்சி, ஜன. 12

தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவல் வெளியீட்டு விழா தைப்பொங்கல் தினமான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபை அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி சி. ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பங்கேற்கவுள்ளார்.

வாழ்த்துரையை வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, வெளியீட்டுரையை பண்பாட்டு பேரவை தலைவர் அருணாசலம் சத்தியானந்தன், விமர்சன உரைகளை போராளியும் எழுத்தாளருமான வெற்றிச்செல்வி, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வ மனோகரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஐ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தியது தமிழரசு

கொழும்பு, ஜன. 12

உள்ளூாராட்சி தேர்தலுக்காக, கிளிநொச்சியில் இலங்கை தமிழரசு கட்சி காட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனித்து போட்டியடுவதென இலங்கை தமிழ் அரசு கட்சி தீர்மானித்த பின்னர், அனைத்து மாவட்டங்களிலும் கட்டுப்பணம் செலுத்தி வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்குமான உள்ளூாராட்சி தேர்தலில் போட்டியிடும் முகமாக இலங்கை தமிழரசு கட்சி நேற்று கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட கிளையின் செயலாளர் வீரபாகு விஜயகுமார் ஆகியோர் நேற்று மதியம் கட்டுப் பணத்தை செலுத்தினர். (ஐ)



ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.01.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சுற்றிவளைக்கப்படுகின்றனரா ராஜபக்ஷக்கள்?

கனடிய அரசு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக தடை வித்துள்ளது. மேலும், இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகவும் தடை விதித்திருக்கின்றது. 2009இல் உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, இறுதி யுத்தத்தோடு தொடர்புபட்டிருந்த இராணுவ அதிகாரிகள் பலரை அமெரிக்கா கறுப்புப் பட்டியிலில் சேர்த்திருந்தது. இதில் முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் ஒருவர்.

ஆனால், முதன்முதலாக நாட்டின் செல்வாக்குமிக்க அதேவேளை இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளை கனடிய அரசு கறுப்புப் பட்டியலில் சேர்த்திருக்கின்றது. இது தென்னிலங்கைக்கு கடுமையான செய்தியாகும். அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவும் நெருக்கடிக்குள் தள்ளப்படுகின்றார். உள்ளூராட்சி தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியும் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவும் கூட்டுச் சேர்ந்திருக்கும் நிலையில் கனடிய அரசின் தடைப் பட்டியல் வெளியாகியிருக்கின்றது.

அதேவேளை கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு கடுமையாக முயற்சி செய்துவருகின்ற நிலையில், அவரது முயற்சிகளுக்கு சிவப்பு எச்சரிக்கையை வழங்கும் வகையிலும்தான் இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. ஒரு காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின்மீது மேற்குலக நாடுகள் தடை விதித்தபோது, தென்னிலங்கை மகிழ்ந்தது. விடுதலைப் புலிகள்மீது இப்போதும் அந்தத் தடை தொடர்கின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பை அமெரிக்கா 1997இல், சர்வதேச பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்தது. நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்கள் தோல்வியடையக் கூடிய நிலையில் விடுதலைப் புலிகளுக்கு சிவப்பு எச்சரிக்கையை வழங்கும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தன. யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்களாகிவிட்ட நிலையிலும்கூட, விடுதலைப் புலிகள் மீதான தடையை மேற்குலக நாடுகள் நீக்கவில்லை. இப்போதும் விடுதலைப் புலிகள் மீது சிறு கருணையைக்கூட காண்பிக்க மேற்குலக நாடுகள் தயாராக இல்லை. இப்போது விடுதலைப் புலிகள் அமைப்பை வெற்றிகொண்டுவிட்டதாக முழங்கிக்கொண்டிருந்த - முன்னாள் இரண்டு ஒரே குடும்ப ஜனாதிபதிகள் கறுப்புப் பட்டியலில் இடப்பட்டிருக்கின்றனர்.

ராஜபக்ஷக்கள் தென்னிலங்கையில் செல்வாக்கு இழந்திருக்கும் சூழலில்தான் கனடிய அரசின் தடை அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. கடந்த ஆண்டு ராஜபக்ஷக்கள், அவர்களை கொண்டாடிய சிங்கள மக்களாலேயே தூக்கி வீசப்பட்டனர். இந்தத் தருணத்துக்காகவே காத்திருந்ததுபோல் கனடிய அரசு, ராஜபக்ஷக்கள் மீது தடை வித்திருக்கின்றது. ராஜபக்ஷக்கள் மனித உரிமைகள் மீறலுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய குற்றவாளிகள் என்பது சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதேவேளை, ராஜபக்ஷக்கள் மீளவும் ஆட்சியில் அமர்ந்தால், இலங்கைத் தீவு மேலும் தனிமைப்பட வேண்டும் என்பதே இதன் மூலம் சொல்லப்படும் செய்தி. இது ராஜபக்ஷக்களின் ஆதரவாளர்களுக்கு மட்டுமான செய்தியல்ல மாறாக, அவர்களுடன் கூட்டுச் சேர்வதன் ஊடாக, அதிகாரத்துக்கு வரமுற்படும் ரணில் விக்கிரமசிங்கவுக்குமான செய்தியாகும்.

# இணையத்தில் தமிழ் மொழி பயன்பாடு; யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் செயலமர்வு

*யாழ்ப்பாணம், ஜன. 12*

தமிழ் அறிதநுட்பியல் உலகாயம், இலங்கை தமிழ் விக்கிபீடியா குழுமம் ஆகியன இணைந்து இணையத்தில் தமிழ் மொழிப் பயன்பாடு தொடர்பான செயலமர்வு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளன.

இந்த செயலமர்வு, எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையில் யாழ்ப்பாணம், இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிரீம் ஹவுஸின் மேல் மண்டபம்) நடைபெறவுள்ளது.

தமிழ் அறிதநுட்பியல் உலகாயம் அமைப்பின் தலைவர் ந. குகதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதானமாக மூன்று உரைகளும் அதற்கான விளக்கங்களும் நடைபெறவுள்ளன.

"கணினிகளுக்கு நிகராக திறன்பேசிகளின் செயல்பாடு" என்ற தலைப்பில் காசி ஜீவலிங்கம் (கணினி விரிவுரையாளர்,

நிகழ் நிரலாளர், உப செயலாளர், தமிழறிதம்) முதலில் உரையாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து "தமிழ் விக்கிபீடியா அறிமுகம்" இடம்பெறும். இ. மயூரநாதன் வழங்குவார். (தமிழ் விக்கிப்பீடியர் இலங்கைக் குழுமம்) மயூரநாதன் தமிழ் விக்கிபீடியாவின் முன்னோடி என்பதும், இதற்காக தமிழகத்தில் விருதுபெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, "மொஸில்லா பொதுக்குரல் திட்டம் மூலம் இயந்திர வழி கற்றல் தொழிநுட்ப உருவாக்கம்" என்ற தலைப்பில் பரதன் தியாகலிங்கம் (மென்பொருள் பொறியாளர்) உரையாற்றுவார்.

இறுதியாக கலந்துரையாடலும், கலந்துகொள்பவர்களின் கேள்விகளுக்கான விளக்கங்களும் நடைபெறும். செயலமர்வில் பங்குபற்றுவோர்க்கு இணையவழிச் சான்றிதழ் (Digital) மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்பாக உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

மேலதிக விவரங்களுக்கு 077 730 4010 என்ற எண்ணைத் தொடர்புஎன்று தமிழறிதம் செயலாளர் சி. சரவணபவானந்தன் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# நெல்லியடி மத்திய கல்லூரிக்கு பழைய மாணவர்களால் பேருந்து

*வடமராட்சி, ஜன. 12*

நெல்லியடி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்காக லண்டன் பழைய மாணவர்களால் பேருந்து ஒன்று நேற்று புதன்கிழமை அன்பளிப்பு செய்யப்பட்டது.

நெல்லியடி மத்திய கல்லூரி லண்டன் கிளை பழைய மாணவர்களால் 58 இலட்சம் ரூபாய் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பேருந்து பாடசாலை அதிபர் கிருஷ்ணகுமாரிடம் கையளிக்கப்பட்டது.

முன்னதாக ஆலயத்தில் பூசைகள் இடம் பெற்று அதனைத் தொடர்ந்து பாடசாலையில் வைத்து பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. (ஐ-02)

# வரவேற்பு விழா

*யாழ்ப்பாணம், ஜன. 12*

கோப்பாய் ஆசிரியர் கலா சாலையில் புதிதாக கற்கையை ஆரம்பித்துள்ள ஆசிரிய மாண வர்களுக்கான வரவேற்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்ப கல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலாசாலை யின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கமும் அவரின் பாரி யார் வவுனியா தாதிய பயிற்சி கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி சோதிமலர் கருணலிங் கமும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ)

# கூட்டுறவு நகர் நிலையம் மருதங்கேணியில் திறப்பு

*வடமராட்சி, ஜன. 12*


வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தால் கூட்டுறவு நகர் விற்பனை நிலையம் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் தங்கவேல் தங்கரூபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் மு.சந்திரசேகர், சிறப்பு விருந்தினரான வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், சங்க தலைவர் தங்கவேல் தங்கரூபன், கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் சண்முக நாதன், முன்னாள் தலைவர்களான சி. திரவியநாதன், பொன்னம்பலம் ஆகியோர் விருந்தினர்களாக பங்கேற்றனர்.

கூட்டுறவு நகர் விற்பனை நிலையத்தை நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மு.சந்திரசேகர், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நிர்வாக அதிகாரியுடன் இணைந்து திறந்து வைத்து நாள் கொள்வனவையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்கள், நலன் விரும்பிகள், சங்க பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ- 02)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜனவரி - 12 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 28
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சஷ்டி




**மேடம்**
வியாபாரத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மனதில் நினைத்ததை செயல்படுத்தி மகிழ்ச்சி காண்பீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**இடபம்**
நீண்ட நாட்களாக தள்ளி வைத்து வந்த வேலையில் இன்று கவனம் செலுத்துவீர்கள். அரசு வழியிலான முயற்சி நிறைவேறும். செயல்களில் லாபம் உண்டாகும். பகைவர்களின் தொல்லை விலகும்.

**மிதுனம்**
நேற்று மேற்கொண்ட ஒரு முயற்சி இன்று நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். எதிர்பார்த்த செய்தி ஒன்று வந்து சேரும். சகோதரர்கள் வழியில் நன்மை உண்டு. தைரியமாக செயல்படுவீர்கள்.

**கடகம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகளுக்கு பேசி தீர்வு காண்பீர்கள். நன்மை அதிகரிக்கும் தம்பதிகளுக்குள் நெருக்கம் அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயல்படுவீர்கள்.

**சிம்மம்**
தொழில் ரகசியங்களை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள். ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளில் ஈடுபடுவீர்கள். மனதில் குழப்பம் தோன்றும்.

**கன்னி**
குடும்பத்திற்காக செலவுகள் அதிகரிக்கும். உங்களது எதிர்பார்ப்பு இழுபறியாகும். யோசித்து செயல்பட்டாலும் திடீர் செலவுகள் ஏற்பட்டு சங்கடப்படுவீர்கள். நிதானம் காப்பது அவசியம்.

**துலாம்**
நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வராமல் இருந்த ஒரு தொகை இன்று உங்கள் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய திட்டமிடுவீர்கள். உங்கள் முயற்சி நிறைவேறும். நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்காலம் குறித்த எண்ணம் மேலோங்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**தனுசு**
குடும்பத்திற்குள் உண்டான குழப்பம் விலகும். தந்தையின் ஆலோசனை நன்மை தரும் வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். நிதிநிலை உயரும்.

**மகரம்**
செயலில் கவனம் தேவை. அமைதி காப்பது நன்மையாகும். முயற்சிகள் இழுபறியாகும். சந்திராஷ்டமம் என்பதால் மற்றவர் பிரச்னைகளில் தலையிட வேண்டாம். வேலைகளில் குழப்பம் உண்டாகும்.

**கும்பம்**
உங்கள் திறமை வெளிப்படும். அக்கம் பக்கத்தினர் பாராட்டுவார்கள். வருமானம் கூடும். உங்களைத் தேடி முக்கிய பொறுப்புகள் வரும். தம்பதிகளுக்குள் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள். குடும்பநிலை உயரும். எதிர்ப்பு விலகும். விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைத் தேடி வருவார்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும்.



தஞ்சாவூர் - திருவையாறில் தியாகராஜருக்கு அஞ்சலி செலுத்தும்விதமாக பஞ்சரத்ன கீர்த்தனை இசைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

# அழிவுப் பாதையில் செல்கிறது தமிழ்நாடு!

## அ. தி. மு. க. குற்றச்சாட்டு

*சென்னை, ஜன. 12*

தமிழகத்தில் கஞ்சா பிடிக்கப்படுகிறது என்று வரும் செய்தி சாதாரண செய்தியல்ல என்று தமிழ்நாடு அழிவுப் பாதைக்கு செல்லும் செய்தி என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடரில் நேற்று ஆளுநர் உரையின் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இதில் கேள்வி நேரம் முடிந்த பிறகு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி எழுந்து, தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக குற்றம்சாட்டினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், ”எதிர்க்கட்சித் தலைவர் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக சொல்கிறார். அ. தி. மு. க. ஆட்சியில் நடைபெற்ற சட்டம் - ஒழுங்கு பிரச்னைகள் பட்டியல் வைத்துள்ளேன். பொத்தாம் பொதுவாக கூறாமல் ஆதாரத்துடன் கூற வேண்டும்” என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சட்டம் - ஒழுங்கு குறித்த முதல்வரின் பதிலுக்கு எதிர்ப்பு தெரிவித்து அ. தி. மு. க உறுப்பினர்கள் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, “கொலை, கொள்ளை, நகை பறிப்பு என்ற செய்திதான் நாள் தோறும் வருகிறது. அரசின் கவனத்துக்குக் கொண்டு வர சபாநாயகர் அனுமதிக்க வில்லை. சென்னையில் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் பாதுகாப்பு பணிக்காக சென்ற பெண் காவலருக்கு தி. மு. கவினர் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளனர்.

பெண் காவலரே புகார் செய்தும், பிரதி பொலிஸ் மா அதிபர் விசாரணை செய்த பிறகே கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டம் - ஒழுங்கு முழுமையாக சீர்கெட்டுள்ளது. போதைப்பொருள் நடமாட்டம் அதிகரித்து, சந்தையாக மாறியுள்ளது. தினந்தோறும் கஞ்சா பிடிபடும் செய்திகள் வந்துகொண்டே உள்ளது. சபாநயகர் நடுநிலையோடு அனுமதியளிக்காதது வேதனை அளிக்கிறது. கஞ்சா பிடிக்கப்படுவது தொலைக் காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் வரும் செய்தி, சாதாரண செய்தியல்ல. தமிழ்நாடு அழிவுப் பாதைக்கு செல்லும் செய்தி” என்று அவர் கூறினார். (ஐ)

# காரில் சிலிண்டர் வெடிப்பு 6 பேர் மீது விசாரணை தீவிரம்!

*கோவை, ஜன. 12*

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கில் கைதானவர்களில் 6 பேரை காவலில் எடுத்துள்ள தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ) அதிகாரிகள், கோவையில் உள்ள அலுவலகத்தில் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை கோட்டைமேட்டில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 21ஆம் திகதி கார் வெடிப்பு சம்பவம் நடந்தது. இதில், காரை ஓட்டி வந்த அதே பகுதியை சேர்ந்த ஜமேஷா முபின் (25) என்பவர் உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக என். ஐ. ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தி 11 பேரை கைது செய்தனர். இவர் களில் சிலரை கடந்த மாத இறுதியில் காவலில் எடுத்து விசாரித்தனர்.

இதன் அடுத்த கட்டமாக, கார் வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட முகமது தல்கா, ஷேக் இதாயத் துல்லா, முகமது ரியாஸ், முகமது நவாஸ், முகமது தவுபீக், சனோபர் அலி ஆகியோரை சில தினங்களுக்கு முன்னர் காவலில் எடுத்து என். ஐ. ஏ. அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். 6 பேரையும் நேற்றுமுன்தினம் அதிகாலை கோவைக்கு அழைத்து வந்து விசாரித்து வருகின்றனர்.

இந்த வழக்கில் உயிரிழந்த முபின், கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோனர் சத்தியமங்கலத்தில் உள்ள அடர்ந்த வனப்பகுதிக்குச் சென்று சதி ஆலோசனையில் ஈடுபட்டதை என். ஐ. ஏ. அதிகாரிகள் விசாரணையில் கண்டறிந்திருந்தனர். அது தொடர்பாக இவர்களிடம் விசாரிக்கப்பட்டு இருக்கலாம் என தெரிகிறது.

தவிர, தொழில்நுட்ப ரீதியிலான ஆதாரங்களை திரட்ட, 6 பேரையும் கோட்டைமேடு உள்ளிட்ட பகுதிகளுக்கும், சதித் திட்டம் தீட்டப்பட்ட சத்தியமங்கலம் வனப்பகுதிக்கும் அழைத்துச் சென்று ஆதாரங்களை திரட்டவும், விசாரணை நடத்தவும் என். ஐ. ஏ. அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ஐ)

# அ. தி. மு. க. கட்சியிடம் உயர்நீதிமன்று கேள்வி!

*சென்னை, ஜன. 12*

அ. தி. மு. க. பொதுக்குழு வழக்கில் அ. தி. மு. க. தலைமை அலுவலகத்துக்கு உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. அத்துடன், வழக்கையும் வரும் 16ஆம் திகதிக்கும் ஒத்திவைத்தது.

அ. தி. மு. க. பொதுக்குழு விவகார வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு அளித்த தீர்ப்பை எதிர்த்து ஓ. பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று புதன் கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அ. தி. மு. க. பொதுக்குழவின் நிகழ்ச்சி நிரலில் பன்னீர்செல்வத்தை நீக்குவது இல்லாதபோது பன்னீர்செல்வத்தை எப்படி நீக்கினீர்கள் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஜனநாயக அடிப்படையில் பலம் பொருந்திய கட்சியை செயல்பட விடாமல் தடுப்பதை ஏற்க முடியாது. நீதிமன்றத்திலும், தேர்தல் ஆணையத்திலும் பன்னீர் செல்வம் தவறான தகவல்களை அளித்து வருகிறார் என்று அ. தி. மு. க. தலைமை அலுவலகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கட்சியில் எந்த ஆதரவும் இல்லாத ஒருவர் பொதுக்குழு கூட்டத்தையும் முடிவையும் எதிர்ப்பது அடிப்படையற்றது என்று அ. தி. மு. க. தலைமை அலுவலகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தனித்தனியாகப் போட்டி மன்னாரில் சேர்ந்து ஆட்சி

## நம்புகின்றார் சாள்ஸ் நிர்மலநாதன்

மன்னார், ஜன. 12

**மன்னார் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று அங்கத்துவக் கட்சிகளும் இணைந்து மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றும் என தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வன்னித் தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்துக்கான கட்டுப்பணம் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக நேற்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மன்னார் தேர்தல் அலுவலகத்தில் செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தலுக்காக குறித்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுடன் தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்-

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக மன்னார் மாவட்டம் சார்பாக கட்டுப்பணம் செலுத்தி உள்ளோம். 2018 ஆம் ஆண்டு தேர்தல் முறைமை காரணமாக உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மாத்திரம் தமிழ் அரசுக் கட்சி தனித்து போட்டியிடுவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கட்சிகளுக்கு இடையில் எந்த பிரச்னையும் இல்லை. உதாரணமாக மன்னார் நகர சபையில் ஒரு வட்டாரத்தை தவிர மிகுதி வட்டாரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி இருந்தது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களால் ஆட்சி அமைக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டு வேறு கட்சியைச் சேர்ந்தவர்களை அழைத்தே நாங்கள் ஆட்சி அமைத்தோம்.

அதன் காரணமாகவே தனித்தனியாக தேர்தலில் போட்டியிடுவதாகவும்,வெற்றி பெற்று வரும் உறுப்பினர்கள் ஒன்றாக ஆட்சியமைப்பதாகவும் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கதைத்தோம்.

அதனடிப்படையில் கட்சிகள் முடிவெடுத்துள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் மூன்று கட்சிகள் சார்பாக போட்டியிட்டால் குறித்த மூன்று கட்சி சார்பாகவும் வாக்களிக்குமாறு தெரிவிப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளும் இணைந்து மன்னார் மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றும் - என்றார். (அ)

# அரச ஊழியர்கள் சம்பளம் அச்சம் கொள்ளவேண்டாம்!

## கூறுகின்றார் ஷெஹான் சேமசிங்க

கொழும்பு, ஜன. 12

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அல்லது நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வருமானம், அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், நலத்திட்ட உதவிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சில திட்டங்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து செலுத்தவேண்டிய கட்டணங்களைச் செலுத்துவதற்கான திட்டம் தொடர்பில் தற்போது சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# குழந்தைகள் மத்தியில் டெங்கு அதிகம் பரவும்!



கொழும்பு, ஜன. 12

குழந்தைகள் மத்தியில் டெங்கு நோய் அதிகளவில் பரவும் போக்கு காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட 40 சிறுவர்கள் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், 8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே குழந்தைகளுக்கு டெங்கு அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுக்கு அனுப்பி சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பெற்றோரிடம் அவர் விசேட கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், நோய் அறிகுறிகளைக் கொண்ட குழந்தைகளை பாடசாலைகள் மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதை பெற்றோர் தவிர்க்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

பெற்றோர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை மிகவும் கடினமான நிலையை அடைந்த பின்னர் வைத்தியசாலையில் சேர்ப்பது மிகவும் ஆபத்தானது எனவும் அவர் எச்சரித்தார். (அ)

# சிறிசுமண தேரருக்கு பிடியாணை

கொழும்பு, ஜன. 12

திகோ குழுமத்தின் உரிமையாளர் திலினி பிரியமாலியின் பண மோசடிக்கு உதவியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பிணையில் உள்ள பொரளை சிறிசுமண தேரரை கைது செய்து ஆஜர்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்தன உள்ளிட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலையாகினர். (அ)

# கரம்பொன்னில் கடலாமையை இறைச்சியாக்கியவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 12

அனுமதி பத்திரம் இன்றி சட்டவிரோதமாக கடல் ஆமையை பிடித்து கொலை செய்து இறைச்சியாக்கி உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்காக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்துறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஊர்காவல்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கரம்பொன் பகுதியில் வசிக்கும் 52 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)





# ஜனாதிபதியை சந்தித்த அமெரிக்க பிரதானிகள்

கொழும்பு, ஜன. 12

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புச் சபையின் தெற்காசியாவுக்கான சிரேஷ்ட பணிப்பாளர் எலைன் லோபச்சர் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலில், ஜனநாயகம், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல், உலகளாவிய சூழலை மேம்படுத்துதல் மற்றும் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையேயான 75 ஆண்டுகால இரு நாட்டு நட்புறவு, இலங்கை மக்களுக்கு அமெரிக்கா அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புச் சபையின் தெற்காசியாவுக்கான சிரேஷ்ட பணிப்பாளர் எலைன் லோபச்சர் நேற்று இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையிலேயே குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (அ)

# மகிந்த வெளிநாடு பயணிக்க அனுமதி

கொழும்பு, ஜன. 12

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு, காலி முகத்திடலில் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றினால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மகிந்தவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி கோரி அவரது சட்டத்தரணியினால் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

அதனை, கருத்திற்கொண்டு எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான 10 நாட்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதியை கோட்டை நீதவான் திலின கமகே வழங்கினார். (அ)

# ஏழு படகுகள் மோதரையில் தீக்கிரை

கொழும்பு, ஜன. 12

மோதரையில் 7 மீன்பிடிப் படகுகள் தீயில் எரிந்து சேதமாகியுள்ளதாக மோதரை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த படகுகளில் தீ பற்றியமைக்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலையில் மோதரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்றத் தேர்தலை விரைந்து நடத்தவேண்டும்!

## ஜே.வி.பி. வலியுறுத்து



கொழும்பு, ஜன. 12

"இந்த அரசால் ஒருபோதும் பிரச்னையைத் தீர்க்க முடியாது. புதிய அரசால் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். எனவே, பாராளுமன்றத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும்."

- இவ்வாறு ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில்,

2022 ஆம் ஆண்டு போல்தான் 2023 ஆம் ஆண்டும். மக்களின் எந்தவொரு பிரச்னையும் தீர்ப்பதற்கான அறிகுறிகள் எவையும் இல்லை.

இந்தப் பொருளாதார, அரசியல், கலாசார சீரழிவில் இருந்து நாட்டை மீட்பதாக இருந்தால் இப்போது இருக்கின்ற சம்பிரதாய கட்சிகளுக்கு பதிலாக உண்மையான மக்கள் ஆட்சி ஏற்படவேண்டும்.

ஏதோவொரு வகையில் அந்த மக்கள் எழுச்சி கடந்த காலங்களில் எழுந்தது. அதன் முலம் முன்னாள் ஜனாதிபதியை மக்கள் விரட்டியடித்தார்கள். முன்னாள் பிரதமரை விரட்டியடித்தார்கள். பல அமைச்சர்களை விரட்டினார்கள். அரசு ஓரளவு சரி மக்கள் முன்னிலையில் மண்டியிடும் நிலை ஏற்பட்டது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 75 வீதம் மின் கட்டணத்தை அரசு உயர்த்தியது. இப்போது மீண்டும் 70 வீதத்தால் உயர்த்துவதற்குத் திட்டமிடுகின்றது.

இதற்கான அனுமதியை வழங்கும் தீர்மானம் ஒத்திப் போடப்பட்டாலும் கூட எப்படியும் அமைச்சரவை அனுமதி வழங்கும்.

இதைத் தாங்கும் நிலையில் மக்கள் இல்லை. இதனால் பல தொழில்சாலைகள் மூடப்படும். மக்கள் மேலும் தொழில்களை இழப்பர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதிகூட இந்த மாதம் கிடைக்கும் நிலையில் இல்லை. எதிர்வரும் மார்ச் மாதம்கூட கிடைக்காது.

இதற்கெல்லாம் ஒரே தீர்வு மக்கள் ஒன்றிணைந்த ஆட்சிதான். அதற்காக நாம் எதிர்பார்ப்பது நாடாளுமன்றத் தேர்தலையே.

அதைவிட்டுவிட்டு எல்லோரையும் ஒன்றுசேர வருமாறு அழைக்கிறார்கள். எதற்காக ஒரு சேர வேண்டும்?

திருடர்களைத் தண்டிப்பதாக இருந்தால் - திருடர்கள் திருடிய பணத்தை மீளப் பெறுவதாக இருந்தால் - வீண்விரயத்தைத் தடுப்பதாக இருந்தால் நாம் ஒன்று சேரத் தயார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தினால் அரசு நிச்சயம் தோல்வியடையும். அதற்குப் பின் அரசு கட்டாயம் நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்ல வேண்டி வரும்.

இந்த நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் ஊழல் மோசடிதான் என்று சர்வதேச நாடுகள் கூறுகின்றன. நிலையான அரசின் மூலமாகவே பொருளாதாரத்தை நிமிர்த்த முடியும் என்று கூறுகின்றன.

அப்படியென்றால் பாராளுமன்றத் தேர்தல் வேண்டும். அதன் மூலம் நிலையான அரசு அமைய வேண்டும்.

பொருளாதார பிரச்னை இருப்பதால் தேர்தலை நடத்த முடியாது என்று அரசால் கூற முடியாது. தேர்தலை நாம் கேட்பதே பொருளாதார பிரச்னையைத் தீர்ப்பதற்குத்தான் - என்றார். (அ)

# கோட்டாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி; சட்டத்துறையில் வாதப்பிரதிவாதங்கள்

கொழும்பு, ஜன. 12

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 2023 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்காக ஒரு கோடியே 41 லட்சத்து 70 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதி சட்டரீதியானதா என்பது தொடர்பில் வலுவான வாத விவாதங்கள் சட்டத்துறை வட்டாரத்தில் ஏற்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற ஜனாதிபதி ஒருவருக்குரிய ஓய்வூதியம் மற்றும் ஏனைய சிறப்புரிமை



களை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அவர் பதவிக் காலத்தை முழுமையாக பூர்த்தி செய்திருக்க வேண்டும் என வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பதவிக்காலத்தை நிறைவு செய்யாமை மற்றும் மக்கள் தமது அதிகாரத்தை பயன்படுத்தி பதவியில் இருந்து விரட்டியமை ஆகிய விடயங்களை அடிப்படையாக கொண்டு வாத விவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டுக்காக தாக்கல் செய்த வரவு செலவுத் திட்டத்தில் கோட்டாபயவுக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வருடாந்த ஓய்வூதியமாக 11 லட்சத்து 70 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கட்டடங்கள் மற்றும் நிர்மாணிப்புகளுக்காக 10 லட்சம் ரூபாவும் வாகனங்களுக்காக 20 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. வேறு செலவுகள் எனக்கூறி ஒரு கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (அ)

# 3 புதிய தூதுவர்களை நியமிப்பதற்கு அனுமதி

கொழும்பு, ஜன. 12

மூன்று புதிய தூதுவர்களை நியமிப்பதற்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி அண்மையில் வழங்கப்பட்டதாக பாராளுமன்றபதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

இதற்கமைய லெபனான் குடியரசின் புதிய இலங்கைத் தூதுவராக கபில சுசந்த ஜயவீரவை நியமிப்பதற்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி கிடைத்துள்ளது.

அத்துடன், பஹ்ரைன் புதிய இலங்கைத் தூதுவராக எச்.எம்.ஜீ.ஆர்.ஆர்.கே. விஜயரத்ன மென்டிஸை நியமிப்பதற்கும், எத்தியோப்பியாவுக்கான புதிய இலங்கைத் தூதுவராகவும், ஆபிரிக்க ஒன்றியத்துக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவும் கே.கே.தெஷாந்த குமாரசிறி ஆகியோரை நியமிப்பதற்கும் பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக பதில் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியது. இதில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே மற்றும் விஜித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜன. 12

எம்பிலிப்பிட்டிய, பனமுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளுத்பர பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 50 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் நேற்று காலை 08.00 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டதாக பனமுர பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பனை, மல்பே, களுகலஹேன பகுதியைச் சேர்ந்த திக்கெனகே ராஜா தயானந்த (வயது-50) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது மகளை மல்பே பல்கலைக்கழகத்தில் விட்டுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தபோது அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் சுடப்பட்ட இடத்தில் இருந்து பத்து பதினைந்து மீற்றர் தூரம் சென்று மோட்டார் சைக்கிளுடன் வீதி ஓரத்தில் விழுந்து ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பெரும் மக்கள் போராட்டம் இவ்வருடம் வெடித்தே தீரும்!

## அரசுக்கு சஜித் அணி எச்சரிக்கை



கொழும்பு, ஜன. 12

கடந்த வருடம் வெடித்த மக்கள் போராட்டத்தை விடவும் பாரிய போராட்டம் இந்த வருடம் வெடிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோசன் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

2022 ஐ விட 2023 மிகவும் மோசமான ஆண்டாக அமையும். பொருளாதாரத்தின் பாரதூரத்தை அரசு அவ்வளவு உணர்ந்ததாகத் தெரியவில்லை.

எரிபொருட்களின் வரிசை மட்டும்தான் குறைந்திருக்கின்றது. வேறு எந்த முன்னேற்றமும் இல்லை. மக்கள் பெரும் துன்பத்தில் உள்ளனர்.

இலங்கை வரலாற்றில் ஒரு போதும் இல்லாத நிலை இது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வை முன்வைக்க அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை.

வட்டி வீதம் அதிகரித்துள்ளதால் வியாபாரம் செய்வது கஷ்டம். உலக சந்தையில் இப்போது எரிபொருட்களின் விலை குறைந்துள்ளது. ஆனால், அரசாங்கம் இங்கு குறைக்கவில்லை.

மக்கள் இப்போது நாட்டை விட்டு ஓடுகின்றார்கள். இங்கு வாழ முடியாது. கடவுச்சீட்டு அலுவலகத்தில் வரிசை நீண்டு கொண்டே செல்கின்றது. கடந்த வருடம் வெடித்த மக்கள் போராட்டத்தை விடவும் பாரிய போராட்டம் இந்த வருடம் வெடிக்கும் - என்றார். (அ)

# தமிழர் விடுதலை கூட்டணி தேர்தலில் தனித்தே போட்டி!

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு!

கொழும்பு, ஜன. 12

தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் தனித்தே போட்டியிடும் என அதன் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சி வெளியேறியுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளும் புதிய சில கட்சிகளும் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், தேர்தலில் போட்டியிடுவதற்கான சின்னம் தொடர்பிலான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்றின் முக்கியஸ்தர் ஒருவர், உதயசூரியன் சின்னத்தைப் பெற்று அதில் போட்டியிடுவது தொடர்பிலும் பரிசீலிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில்,

இது குறித்து தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் தனித்தே போட்டியிடும். கட்சியின் தேர்தல் நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடல் இன்று வவுனியாவில் நடைபெறும் - என்றார். (அ)

# மனித கடத்தல் விவகாரம் பெண் உட்பட மூவர் கைது

கொழும்பு, ஜன. 12

சுற்றுலா விஸாவில் பெண்களை ஓமான் நாட்டுக்கு அனுப்பி வைத்து மனிதக் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூன்று உப முகவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட துணை முகவர்களில் பெண் ஒருவரும் அடங்குவதாக விசாரணைக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் புலனாய்வுக் குழுவொன்று ஓமான் சென்று மனிதக் கடத்தலில் சிக்கிய பெண்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்தக் குழுவைக் கைது செய்துள்ளனர்.

முல்லேரியா, சிலாபம், கந்தானை ஆகிய பகுதிகளில் வசிக்கும் இந்த உப முகவர்கள், பெண்களிடம் பணம் வசூலித்து சுற்றுலா விஸாவில் மனிதக் கடத்தலில் ஈடுபட்டு வருவது தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில், இந்த மோசடியில் ஈடுபட்ட மூன்று துணை முகவர்களை இந்தப் பிரிவு கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# திருமறை கலாமன்றத்தில் ஞாயிறன்று பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 12

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இரண்டு ஆண்டுகளின் பின்னர் இம்முறை மீண்டும் காலை மாலை நிகழ்வுகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பொங்கல் தினமான வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 5.30 மணிக்கு இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறை கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7.00 மணிக்கு இல.17 ,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

கலை நிகழ்ச்சிகள் மாலை 6.00 மணிக்கு இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற திறந்தவெளி அரங்கில் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா கலந்து சிறப்பிப்பார்.

கலை நிகழ்வுகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர்கள் வழங்கும் பொங்கல் பாடல்கள், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் “குசேலர்” இசை நாடகம் ஆகியனவும் “தவறாது வரும் தைமகளும் தவறாகிப் போகும் தலைமுறையும்” என்னும் தலைப்பில் சிறப்புக் கவியரங்கமும் இடம்பெறும்.

கவிஞர் கு. வீரா தலைமையில் இடம்பெறவுள்ள கவியரங்கத்தில் கவிஞர்களான வேலணையூர் சுரேஷ், வெற்றி துஷ்யந்தன், மாவை நா. கஜேந்திரன், தரங்கினி நாவண்ணன் ஆகியோர் பங்குபற்றிச் சிறப்பிப்பார்கள்.

ஆர்வமுடைய அனைவரையும் பங்கேற்று சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# சஜித் அணியிலிருந்து மூவர் அரசின் பக்கம்?

கொழும்பு, ஜன. 12

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 12 பேர் அரசாங்கத்துடன் இணையப் போகின்றார்கள் என்ற தகவல் கடந்த மாதம் வெளிவந்திருந்த நிலையில், தற்போது மூவர் அரசாங்கத்துடன் இணையப் போகின்றார்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

அவர்கள் களுத்துறை, கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூவரில் இருவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகளும், ஒருவருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கின்றது.

இத்தகவலை ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அரசாங்கத்துடன் இணையப் போகும் அரசியல்வாதி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். (அ)

# நாகர்கோவில் பகுதியில் மோட்டார் குண்டுகள்!

வடமராட்சி, ஜன.11

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகர்கோவில் பிரதேசத்திலுள்ள யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் முன்னரங்காக இருந்த தடுப்பு அணைப் பகுதியில் களப்புக்கு அருகில் பழைய மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்கவால் நீதிமன்றில் அறிக்கையிடப்பட்டு மன்றின் கட்டளைப்படி யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினரின் வெடிபொருட்கள் செயலிழப்புப் பிரிவு ஊடாக அவை செயலிழக்க வைக்கப்பட்டன.



(அ-02)

# இளநீர் ஏற்றுமதியின் ஊடாக 6 பில்லியன் ரூபா வருமானம்?

கொழும்பு, ஜன. 12

இந்த வருடத்தில் இளநீர் ஏற்றுமதியின் மூலம் 6 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டுவதற்கு தெங்கு அபிவிருத்திச் சபை எதிர்பார்த்துள்ளது.

அதன் தலைவர் கீர்த்தி வீரசிங்க கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் இளநீர் ஏற்றுமதியின் ஊடாக 2 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்திருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

# அரசை மன்னிக்கக்கூடாது!

## எல்லே குணவன்ஸ தேரர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 12

74 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் ஊழல், மோசடிகள், முறைகேடுகள் மற்றும் மின்சார கட்டணத்தை அடிக்கடி அதிகரித்து மக்கள் மீது சுமையை ஏற்றும் தற்போதைய அரசாங்கத்திற்கும் எவ்வித மன்னிப்பையும் வழங்கக்கூடாது என எல்லே குணவன்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



யானைக்கு ஒரு காலம் வந்தால், பூனைக்கும் ஒரு காலம் வரும். தற்போது பூனைக்கு காலம் வந்துள்ளது. இதனால், அதனை தவறவிடக்கூடாது. எதிர்வரும் தேர்தலில் மக்கள் இதனை வெளிக்காட்ட வேண்டும். அது நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானது.

மின்சக்தி அமைச்சருக்கு மக்கள் மீது அக்கறையில்லை. தற்போது தேர்தல் வருகிறது. மக்கள் எப்போதும் ஏமாற மாட்டார்கள். தேர்தலில் அரசாங்கத்திற்கு மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள் - என்றார்.

(அ)

# பிரேசிலில் நடப்பது என்ன?

## போல்சனாரோ வன்முறை குறித்து என்ன கூறினார்?

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பிரேசிலின் தலைநகரில் கடந்த ஞாயிறன்று நிகழ்ந்த வன்முறை தொடர்பாக முன்னாள் அதிபர் போல்சனாரோவின் ஆதரவாளர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்நாட்டு அதிபர் லூலா தெரிவித்துள்ளார். இந்த சம்பவத்தில் பாதுகாப்புப்படையினர் தங்கள் கடமையை சரியாக செய்யவில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளையில், தனக்கும் இந்த வன்முறை சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று போல்சனாரோ மறுத்துள்ளார்.



**வன்முறைக்கான பின்னணி என்ன?**

பிரேசிலின் முந்தைய அதிபராக இருந்த சயீர் போல்சனாரோ மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. கொரோனா தொற்றுக்கு எதிராக அவர் தீவிரமாக செயலாற்றவில்லை என்பது பிரதான குற்றச்சாட்டு. கடந்த 2021ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பிரேசிலில் கொரோனா தொற்று கோரத்தாண்டவமாடி ஏராளமானோர் உயிரிழந்தனர். எனினும், கொரோனாவை வெறும் சாதாரண காய்ச்சல் என்று அதிபர் போல்சனாரோ கூறியிருந்தார்.

இதேபோல், கொரோனா தடுப்பு மருந்துக்கும் எய்ட்ஸ்க்கும் தொடர்பு உள்ளது என்று கூறி அவர் பதிவிட்டிருந்த வீடியோவை பேஸ்புக் நிறுவனம் நீக்கியது குறிப்பிடத்தக்கது. இதேபோல், அமேசான் மழைக்காடுகளின் பெரும்பகுதி பிரேசிலில் உள்ள நிலையில், போல்சனாரோவின் ஆட்சிக் காலத்தில் அவை சட்டவிரோத சுரங்கத்திற்காக சுரண்டப்பட்டதாகவும் இதனை அப்போதைய பிரேசில் அரசு கண்டு கொள்ளாமல் விட்டதாகவும் குற்றச்சாட்டு உள்ளது. அவரது ஆட்சிக்காலத்தில் அமேசான் காடுகள் அதிகம் அழிவை சந்தித்தன.

அவையெல்லாம் அந்நாட்டு மக்கள் இடையே மிகப்பெரிய வெறுப்பை ஏற்படுத்திய நிலையில், கடந்த ஆண்டு நடைபெற்ற பிரேசில் அதிபர் தேர்தலில் இடதுசாரி வேட்பாளரும் முன்னாள் அதிபருமான லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, வலதுசாரியான சயீர் போல்சனாரோவை தோற்கடித்து ஆட்சியை தன்வசப்படுத்தினார்.

அதிபர் தேர்தலில் லூலா வெற்றி பெற்றது முதல், அவருக்கு எதிராக முன்னாள் அதிபர் போல்சனாரோவின் ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். ராணுவ தலையீடு வேண்டும் என்றும் லூலா தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் கூறிவரும் அவர்கள், தலைநகர் பிரேசிலியாவில் உள்ள அதிபர் மாளிகை, உச்சநீதிமன்றம் மற்றும் நாடாளுமன்ற கட்டடங்களின் முன்பாக வலதுசாரி போராட்டகாரர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

**போல்சனாரோவின் ஆதரவாளர்கள் வேண்டுவது என்ன?**

தனது ஆட்சிகாலம் முழுவதிலும் பிரேசிலின் அரசு அமைப்புகள் மீது போல்சனாரோ கை வைத்து வந்தார். உச்ச நீதிமன்றம் தனக்கு எதிராக செயல்படுவதாக கூறினார். வாக்குப்பதிவு முறைகளில் மோசடி செய்யப்படுவதாக கூறினார். எனினும், இவற்றுக்கு எந்த ஆதாரமும் இல்லை. தற்போது நிகழ்ந்துள்ள வன்முறைகளுக்கு அவர் காரணம் இல்லை என்றாலும் கூட, நிகழ்ந்த சம்பவங்களில் இருந்து அவரை பிரித்து பார்க்க முடியாது. ஏனெனில், போல்சனாரோவின் வார்த்தைகளை அவரது ஆதரவாளர்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டனர்.

அக்டோபரில் நடந்த தேர்தலில் தோல்வியடைந்தால், போல்சனாரோ மிகவும் அமைதியாகிவிட்டார். அவர் தோல்வியை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவில்லை - லூலாவிடம் அதிபர் பதவியை ஒப்படைப்பதைத் தவிர்ப்பதற்காக புளோரிடாவுக்குப் பறந்தார் - மேலும், ஜனநாயகப்பூர்வமாக நடைபெற்ற தேர்தலில் தாம் அடைந்த தோல்வி குறித்து தனது ஆதரவாளர்கள் கோபம்கொள்ள அவர் அனுமதித்தார்.

மேலும், நாடு முழுவதும் ராணுவ தலைமை அலுவலகங்கள் முன்பு கூடாரங்கள் அமைத்த போல்சனாரோ ஆதரவாளர்கள், ராணுவ தலையீட்டுக்கு அழைப்பு விடுத்தனர். கடந்த டிசம்பர் மாதத்தில் பிரேசிலியாவில் உள்ள காவல் நிலையத்திற்கு தீ வைக்கப்பட்டது. இதே போல் லூலாவின் பதவியேற்பின்போது வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக போல்சனாரோ ஆதரவாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.



2017ஆம் ஆண்டு ஊழல் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டு 18 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்த லூலாவை அதிபராக ஏற்க மாட்டோம் என்றும் அவர் இருக்கவேண்டிய இடம் சிறையே தவிர அதிபர் மாளிகை அல்ல என்றும் போல்சனாரோ ஆதரவாளர்கள் கூறி வருகின்றனர். கியூபா அல்லது வெனிசூலாவில் உள்ளதை போன்ற ஆட்சியை அமைக்க அவர் முயற்சிக்கிறார் என்றும் குற்றம்சாட்டுகிறார்கள்.

**தலைநகர் பிரேசிலியாவின் நடந்தது என்ன?**

தேர்தல் முடிந்ததும் போல்சனாரோவின் தோல்வியை ஏற்க மறுத்த அவரது ஆதரவாளர்கள், பிரேசிலியாவில் உள்ள ராணுவ முகாம் முன்பு ஆயிரக் கணக்கில் கூடினர். இவர்கள் பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர். இந்த எதிர்ப்பாளர்களை அகற்றுமாறு உள்ளூர் பாதுகாப்புப் படைகளுக்கு அதிபர் லூலா உத்தரவிட்டார், ஆனால் போலீசார் பலத்தை பயன் படுத்த விரும்பவில்லை. ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் நேரப்படி பிற்பகல் 2 மணிக்கு போல்சனாரோவின் ஆதரவாளர்கள் காவலர்கள் புடைசூழ பேரணியை தொடங்கினர். 3 மணியளவில் போராட்டக்காரர்கள் தடுப்புகளை தகர்த்துவிட்டு நாடாளுமன்றத்தினுள் நுழைந்தனர். சிலர் அதிபர் மாளிகைக்குள் நுழைந்து அங்கிருந்த கலைபொருட்கள், மரச்சாமான்களை சேதப்படுத்தினர். உச்ச நீதிமன்றத்தின் கண்ணாடிகளை களை அவர்கள் அடித்து நொறுக்கினர்.

பிரேசில் தேசிய கால்பந்து அணியின் மஞ்சள் நிற டிஷர்ட்டை அணிந்திருந்த போராட்டக்காரர்கள் வன்முறை சம்பவத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களின் பிரதானமான ஆயுதமாக கற்கள் இருந்துள்ளன. போராட்டகாரர்களின் ஆக்கிரமிப்பில் இருந்து உச்சநீதிமன்றம், அதிபர் மாளிகை உள்ளிட்ட இடங்கள் ஞாயிறு மாலையன்று மீட்கப்பட்டதாக காவல்துறை அறிவித்துள்ளது. இந்த தாக்குதலில் அரசு கட்டிடங்கள் சேதம் அடைந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

வன்முறையை தொடர்ந்து 40 பேருந்துகள் சிறை பிடிக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு பேருந்தில் துப்பாக்கி இருந்ததாகவும் பிரேசிலின் நீதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பிளேவியோ டினோ, செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறினார். மேலும் திங்களன்று 209 பேரும் செவ்வாய் 1200 பேரும் என கிட்டத்தட்ட 1500 பேர்கள் வரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**காவலர்கள் போராட்டத்தை தடுக்க தவறியது எப்படி?**



தலைநகர் பிரேசிலியாவில் நிகழ்ந்த வன் முறையை தடுக்க பாதுகாப்பு படையினர் போதிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்று அதிபர் லூலா குற்றம் சாட்டியுள்ளார். தேர்தல் முடிந்ததும் போல்சனாரோ வின் தோல்வியை ஏற்க மறுத்த அவரது ஆதரவாளர்கள், பிரேசிலியாவில் உள்ள ராணுவ முகாம் முன்பு ஆயிரக் கணக்கில் கூடினர். இவர்கள் பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர். இந்த எதிர்ப்பாளர்களை அகற்றுமாறு உள்ளூர் பாதுகாப்புப் படைகளுக்கு அதிபர் லூலா உத்தரவிட்டார், ஆனால் போலீசார் பலத்தை பயன் படுத்த விரும்பவில்லை.

போராட்டக்காரர்கள் 7 கிலோ மீட்டர் தூரம் நடைபயணமாக அரசு கட்டிடங்களை நோக்கி பேரணி வந்துள்ளனர். எனினும் அவர்கள் காவல்துறையால் தடுத்து நிறுத்தப்படவில்லை. ஞாயிறன்று நடைபெற்ற போராட்டத்திற்கு காவல்துறை தரப்பில் அனுமதி வழங்கப்பட்டதா என்று கேட்டோம். இதுவரை எந்த பதிலும் நமக்கு கிடைக்கவில்லை . மேலும், போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, காவலர்கள் சிலர் போராட்டக்காரகளுடன் புகைப்படம் எடுத்து கொண்ட இரு வீடியோக்களையும் பிபிசி உறுதிப் படுத்தியுள்ளது. மற்றொரு வீடியோவில் காவலர் ஒருவர் போராட்டக்காரர்களால் தள்ளிவிடப்படுவது பதிவாகியுள்ளது.

போராட்டக்காரர்கள் கீழ் தளத்தின் வழியாக நாடாளுமன்ற மேல் தளத்திற்குள் நுழையும்போது காவலர்கள் அமைதியாக நிற்கும் வீடியோவையும் பிபிசி உறுதி செய்துள்ளது. பாதுகாப்பு கவசங்களை கையில் வைத்திருந்த அவர்கள், பிரதான வாயிலை பாதுகாக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளனர்.

ஒரு காவலர் போராட்டக்காரர்களை கை அசைத்து அவர்களுக்கு கைவிரல் காட்டுகிறார். கூட்டம் கட்டடத்திற்குள் முன்னேறும்போது, அவர்களில் சிலர் பாதுகாப்புப் பணியாளர்களைப் பாராட்டினர்.

**மருத்துவமனையில் போல்சனாரோ**

பிரேசிலில் வரலாற்றில் ஒரு வடுவாக மாறியுள்ள இந்த தாக்குதலுக்கும் தனக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்று முன்னாள் அதிபர் போல்சனாரோ அறிவித்திருந்தார். அமைதியான ஆர்ப்பாட்டங்கள் தான் ஜனநாயகத்தின் ஒரு பகுதியாகும் என்று அவர் டுவிட்டரில் கூறியுள்ளார். சட்டங்கள், ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை மற்றும் புனிதமான சுதந்திரம் என நமது அரசியலமைப்பின் நான்கு கோடுகளையும் மதித்து பாதுகாத்து வருவதாகவும் தனது டிவிட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், வயிற்றில் ஏற்பட்ட அசௌகரியம் காரணமாக தனது கணவர் கண்காணிப்பில் இருப்பதாக மிச்செல் போல்சனாரோ தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த 2018 இல் பிரச்சாரத்தின்போது போல்சனாரோ கத்தியால் குத்தப்பட்டார், பின்னர் அவ்வப்போது வயிற்று வலியுடன் அவர் அவதிப்பட்டு வருகிறார். கடந்த 10 நாட்களுக்கு முன்பாகவே அவர் பிரேசிலில் இருந்து அமெரிக்காவுக்கு சென்றுவிட்டார். தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அவரது நிலை கவலைப்படும் அளவுக்கு இல்லை என அவரது குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்ததாக ராய்ட்டர்ஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

**பிரேசிலின் தற்போதைய சூழல் என்ன?**

இந்த வன்முறையை தீவிரவாத தாக்குதல் என்று விமர்சித்துள்ள அதிபர் லூலா நாடாளுமன்றத்தில் நுழைந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார். ஞாயிற்றுக்கிழமை, நாடாளுமன்றம், அதிபர் மாளிகை மற்றும் உச்ச நீதிமன்றம் சூறையாடப்பட்டதை அடுத்து, முன்னாள் அதிபர் சயீர் போல்சனாரோவின் ஆதரவாளர்கள் சுமார் 1,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரேசிலியாவின் ராணுவ தலைமையிடங்கள் முன்பு அமைக்கப்பட்டிருந்த தற்காலிக முகாம்களை பாதுகாப்புப் படையினர் அகற்றி வருகின்றனர். வலதுசாரி ஆதரவாளர்களின் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக ஸா பாலோவில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர். போல்சனாரோ சிறைக்கு செல்ல வேண்டும் என்றும் அவர்கள் கோஷம் எழுப்பினர். நீதி வேண்டி ஆடல், பாடல் ஆகியவற்றுடன் கூடிய போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

# தமிழக ஆளுநரின் செயல்பாடுகள் தமிழக பா.ஜ.கவுக்கு பலனளிக்குமா?

## ஆளுநரின் நடவடிக்கைகளை கண்டிக்கிறார் இந்து பத்திரிகை குழும ராம்!

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின் சில பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி தவிர்த்துவிட்டு வாசித்ததும், அதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்த தீர்மானமும் பெரும் விவாதங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆளுநரின் செயல்பாடுகள், அவரது நோக்கம், மாநில அரசியலில் ஆளுநரின் செயல் ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவை குறித்து தி இந்து குழுமத்தின் இயக்குநர்களில் ஒருவரான என். ராம், பிபிசி தமிழின் செய்தியாளர் முரளிதரன் காசி விஸ்வநாதனிடம் பேசினார். அவர் பேசியதிலிருந்து:

**கேள்வி:** திங்கட்கிழமை தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரையை வாசித்த ஆர்.என். ரவி, அதில் சில பகுதிகளை விட்டுவிட்டு வாசித்தது சர்ச்சையாகியிருக்கிறது. இது மரபு மீறலா?

**பதில்:** இந்த ஆளுநரின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறேன். மிகவும் அத்துமீறி, அரசியல் சாஸனத்திற்கு எதிராகச் செயல்படுகிறார். ஆளுநர் இப்படிச் செயல்பட அதிகாரம் கிடையாது. இவர் ஏதேதோ பேசுகிறார். அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ்நாடு என இருக்கிறது. ஆனால், இவர் தமிழ்நாடு என இருக்க வேண்டாம், தமிழகம் என இருக்கலாம் என்கிறார். திங்கட்கிழமை மிக மோசமாக நடந்து கொண்டி ருீருக்கிறார். அவர் திரும்பப்பெறப்பட வேண்டும்.

எதைப் படிக்கலாம், எதைப் படிக்கக்கூடாது எனத் தீர்மானிக்கும் உரிமை அவருக்கு இல்லை. அமைச்சரவை முடிவுசெய்து எதைக் கொடுக்கிறதோ, அதைத்தான் படிக்க வேண்டும். அவர்கள் கண்ணியமாகத்தான் எழுதியிருக்கிறார்கள். அவர் அதைத்தான் படிக்க வேண்டும். அவர் சில விஷயங்களைப் படித்துவிட்டு, சிலவற்றை விட முடியாது. இவர் மிக மோசமாக நடந்து கொண்டிருக்கிறார். அவர் மட்டுமல்ல, பல ஆளுநர்கள் இப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். குறிப்பாக கேரள ஆளுநர் போன்றவர்கள்.

ஆர்.என். ரவி இங்கிருக்க தகுதியில்லாதவர். அவர் ஒரு காவல்துறை அதிகாரி. அவருக்கு இங்கிருக்கும் கலாசாரம், அரசியல், மொழி போன்றவை புரியவில்லை. தினமும் ஏதோ செய்கிறார். கடந்த காலத்திலும் ஆளுநர்கள் பல தருணங்களில் தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் பதவியே இதுபோல ஆகிவிட்டது. தில்லியிலிருந்து உத்தரவு வருகிறதா அல்லது இவரே செய்கிறாரா என்று தெரியவில்லை. ஆனால், இவர் செய்யும் விஷயங்கள் விசித்திரமாக இருக்கின்றன. இவர் திரும்பப்பெற வேண்டும்.

**கேள்வி:** ஆளுநர்கள், ஆளுநர் உரையில் தங்களுக்குப் பிடிக்காத சித்தாந்தம் குறித்துவரும்போது, அதைத் தவிர்த்துவிட்டு வாசிக்க முடியுமா?

**பதில்:** முடியாது. இவருக்குப் பிடித்ததைத்தான் படிப்பேன், பிடிக்காததைப் படிக்க மாட்டேன் எனச் சொல்ல முடியாது. ஆளுநர் என்பவர் அரசியல் சாஸன ரீதியாக மாநிலத்தின் தலைவர். அவ்வளவுதான். அவருடைய அதிகாரங்கள் மிகக் குறைவு. அரசியல்சாஸனத்தில் அது குறிப்பிடப்பட்டுள்ளது. பல உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளும் இது தொடர்பாக இருக்கின்றன. ஆகவே நான், எனக்குப் பிடித்ததைத்தான் படிப்பேன் எனச் சொல்ல முடியாது. இங்கு பா.ஜ.க. அரசு இல்லை. இங்கு ஒரு பதற்றத்தை ஏற்படுத்த விரும்புகிறார்.

**கேள்வி:** ஆளுநர் அவையில் இருக்கும் போதே, அவரைக் கண்டிக்கும் வகையிலோ, ஆளுநர் பேசியதை நீக்கும் வகையிலோ தீர்மானத்தைக் கொண்டு வருவது மரபுகளை மீறிய செயல் என்கிறார்கள் எதிர்க்கட்சிகள்...

**பதில்:** கண்டிப்பாக செய்யலாம். இது என்ன பெரிய விஷயமா? ஆளுநர் பெரிய தவறைச் செய்துவிட்டார். அதைச் சரிசெய்ய வேண்டும். ஆகவே அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருகி றார்கள். அந்தத் தீர்மானம் கண்ணிய மாகத்தானே இருந்தது? ஏதோ குறை சொல்ல வேண்டுமெனச் சொல்கிறார் கள். இப்படிச் சொல்பவர்கள் ஆளுநரை மறைமுகமாக ஆதரிப்பதாகத்தான் நினைக்கிறேன்.


கேள்வி: ஆளுநருக்கும் மாநில அரசுக்கும் மோதல்கள் நீடிக்கும் நிலையில், மசோதாக்கள் நிலுவையில் உள்ள நிலையில், மாநில அரசுக்கு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன?

**பதில்:** பல சட்ட உரிமைகள் இருக்கின்றன. அரசியல்சாஸன உரிமைகள் இருக்கின்றன. உச்ச நீதிமன்றம் பல முறை அதைச் சொல்லியிருக்கிறது. மத்திய அரசு ஆளுநரைப் பயன்படுத்தி பல தவறுகளைச் செய்கிறது. அதனால் தான் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் ஆளுநர் பதவியையே ஒழித்துவிட வேண்டுமெனச் சொன்னார். இப்படியெல்லாம் நடந்தால் ஆளுநர் பதவியே தேவையில்லை என்றுதான் மக்கள் புரிந்து கொள்வார்கள்.

**கேள்வி:** ஆளுநர் உரை, ஆளுநருக்கு வழங்கப்பட்ட பிறகு அதில் திருத்தங்கள் தேவை என ஆளுநர் கேட்க முடியுமா?

**பதில்:** கேட்கலாம். ஆனால், அரசின் முடிவுதான் இறுதியானது. ஆளுநர் பதவி என்பது ஒரு அலங்காரப் பதவி தான். நாடாளுமன்ற முறையில் அப்படித்தான் இருக்க முடியும். பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறையை நாம் பின்பற்றுகிறோம். அங்கு, அரசு எழுதிக் கொடுப்பதையே அரசர்கள் வாசிப்பார்கள். நம் குடியரசுத் தலைவரும் அதைத்தான் செய்கிறார். எந்தக் குடியரசுத் தலைவராவது மாற்றிப் படித்திருக்கிறார்களா? ஆளுநர்களுக்கு அதைவிட குறைவான அதிகாரம் தானே இருக்கிறது. இது அரசியல்சாஸன மரபுகளுக்கு மாறானது.





**கேள்வி:** ஆளுநர் வெளியிலும் தனிப்பட்ட முறையில் பல கருத்துகளைத் தெரிவித்து வருகிறார். அது பல தருணங்களில் சர்ச்சைகளை ஏற்படுத்தும் விதத்தில் இருப்பதாக ஆளும் தரப்பினர் சொல்கிறார்கள். குறிப்பாக, சமீபத்தில் தமிழ்நாடு - தமிழகம் குறித்த ஆளுநரின் பேச்சுகூட இப்படி சர்ச்சையானது. இதுபோல ஆளுநர்கள் கருத்துக்களைச் சொல்லி, விவாதங்களை ஏற்படுத்த முடியுமா?

**பதில்:** இதெல்லாம் பா.ஜ.கவுக்காக செய்யும் விஷயம். அப்படிச் செய்யக் கூடாது. மீறிச் செய்தால், மக்கள் கண்டிப்பார்கள். பொதுவாக ஆளுநரை யாரும் கடுமையாகக் கண்டிக்க மாட்டார்கள். விமர்சிக்க மாட்டார்கள். ஆனால், இதுபோலச் செய்தால், விளைவுகளைச் சந்திக்கத்தான் வேண்டும். பலர் அவருக்கு எதிராகப் பேசுவார்கள். ஆளுநரைத் திரும்பப் பெற வேண்டுமென கோரிக்கை வரும். எதும் திட்டமிட்டு செய்கிறாரா, அல்லது தெரியாமல் செய்கிறாரா எனத் தெரியவில்லை. ஆனால், வன்மையாக கண்டிக்க வேண்டிய போக்கு இது.

**கேள்வி:** ஆளுநரின் செயல்பாடுகள், இங்குள்ள பா.ஜ.கவுக்கு பலனளிக்குமா?

**பதில்:** பெரும்பாலும் விளைவு எதிராகத்தான் இருக்கும். அவர் தப்புக் கணக்குப் போடுகிறார். அந்தக் கட்சி மீதும் கட்சித் தொண்டர்கள் மீதும் வெறுப்பு ஏற்படும். தவறு செய்கிறார்கள் என்று நினைப்பார்கள். அவர் சில சமயங்களில் வேண்டுமென்றே செய்கிறார், சில சமயங்களில் தெரியாமல் செய்கிறார். அவருக்கு தமிழ்நாட்டின் வரலாறு தெரியுமா? எப்படி தமிழ்நாடு எனப் பெயர் வந்தது எனத் தெரியுமா?. அவருடைய அர்த்தமில்லாத பேச்சுகளை ஊடகங்கள் விவாதிக்கத்தேவையில்லை.

“எதைப் படிக்கலாம், எதைப் படிக்கக்கூடாது எனத் தீர்மானிக்கும் உரிமை அவருக்கு இல்லை. அமைச்சரவை முடிவுசெய்து எதைக் கொடுக்கிறதோ, அதைத்தான் படிக்க வேண்டும். அவர்கள் கண்ணியமாகத்தான் எழுதியிருக்கிறார்கள். அவர் அதைத்தான் படிக்க வேண்டும்.”

**கேள்வி:** அரசியல்சாஸன மரபுகளை மீறி ஆளுநர் செயல்படும்போது ஆளும் அரசுக்கு என்ன வழி இருக்கிறது? ஒவ்வொரு முறையும் உச்ச நீதிமன்றத்தை நாட முடியுமா?

**பதில்:** எதிர்க்கத்தான் வேண்டும். இப்போது செய்ததைப் போல தீர்மானம் கொண்டுவரலாம். எல்லா மசோதாக்களையும் அவர் வைத்துக்கொள்கிறார். தில்லிக்கு அனுப்ப மறுக்கிறார். எத்தனை மசோதாக்கள் நிலுவையில் உள்ளன என்பதே மறந்துவிட்டது. அவருக்கு எதிராக அரசியல் ரீதியாகத்தான் செயல்பட வேண்டும். ஆளுநரைப் பொறுத்தவரை பிரச்சனை ஏற்படுத்த நினைக்கிறார். அவரால் எதுவும் செய்ய முடியாது.

# குறும்பட, புகைப்பட போட்டி; விண்ணப்பத் திகதி நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 12

2023 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு 'பெண்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டை முன்னிலைப்படுத்தல்' எனும் கருப் பொருளில் நடத்தும் குறும்படம் மற்றும் புகைப் படப் போட்டி, பெண் சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு ஆகியவற்றுக்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் "மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், இல. 04, புரூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டிவீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின் அஞ்சல் npminwa@gmail.com அல்லது 021 222 0884, 021 222 0883 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். (ஐ)

# யூரியா உரத்தை விற்றே ஊதியம் வழங்கினோம்!

## விவசாய அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 12

யூரியா உரம் விற்பனை செய்து பெறப்பட்ட பணத்தில் இருந்தே அரச ஊழியர்களுக்கான டிசெம்பர் மாத சம்பளம் வழங்கப்பட்டதாக விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விவசாயத் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் அமைச்சில் இடம்பெற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

கடந்த சிறுபோகம் மற்றும் இந்த முறை பெரும் போகத்திலும் யூரியா உரங்கள் மற்றும் ஏனைய உரங்களை விற்பனை செய்த விவசாய அபிவிருத்தி திணைக்களம் ஆயிரம் கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

கருவூலத்துக்கு அனுப்பப்பட்ட அந்த நிதியின் ஒரு பகுதியை அரச ஊழியர்களின் டிசெம்பர் மாத சம்பளத்தை வழங்குவதற்கு அரசாங்கம் பயன்படுத்தியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# இன்று முதல் 42 ரயில் சேவைகள் இரத்தாகும்!

கொழும்பு, ஜன. 12

இன்று வியாழக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை 42 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பல அலுவலக ரயில் சேவைகள் மற்றும் பிற ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. பிரதான புகையிரத பாதையில் 20 ரயில்களும், புத்தளம் ரயில் பாதையில் 4 புகையிரதங்களும், களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதையில் இரண்டும் மற்றும் கரையோரப் பாதையில் 16 ரயில் சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை கிட்டத்தட்ட 500 புகையிரத திணைக்கள ஊழியர்கள் ஓய்வு பெறுவதால் ரயில் சேவைகள் தடைபட்டன என்று புகையிரத தொழிற்சங்கங்கள் இந்த மாத தொடக்கத்தில் தெரிவித்தன. (ஐ)

# யாழ். மாநகர சபையின் பதில் முதல்வரானார் ஈசன்



யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதில் முதல்வராக துரைராசா ஈசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வராக பதவி வகித்த வி. மணிவண்ணன் கடந்த முதலாம் திகதி பதவி விலகினார். இதையடுத்து அவரின் பதவி வறிதானது. இதையடுத்து எதிர்வரும், 19ஆம் திகதி முதல்வர் தெரிவு நடைபெறவுள்ளது.

இந்நிலையில், யாழ். மாநகர சபையின் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வசதியாக பிரதி முதல்வர் து. ஈசன் பதில் முதல்வராக உள்ளூராட்சி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தம்பதியரை வெட்டி விட்டு தலைமறைவானவர் கைது!

இருபாலையில் வீடு புகுந்து கணவன் - மனைவியை வெட்டிக் காயப்படுத்தி விட்டு தலைமறைவாக இருந்தவரை நேற்று கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர்.

இருபாலை மடத்தடி பகுதியில் கடந்த டிசெம்பர் 20ஆம் திகதி வீடு ஒன்றுக்குள் புகுந்தவர் அங்கிருந்த கணவன், மனைவியை வெட்டிக் காயப்படுத்தி விட்டு தலைமறைவாகியிருந்தார்.

வலைப்பாடு பகுதியில் அவர் தலைமறைவாக இருந்த நிலையில் நேற்று அவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அத்துடன், இந்தத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாளும் சந்தேகநபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-03)

# ஆதர்ஷா கைது!

கொழும்பு, ஜன. 12

ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பேராசிரியர் ஆஷூமாரசிங்கவுக்கு எதிராக கருத்து வெளியிட்டிருந்த ஆதர்ஷா கரந்தன கைது செய்யப்பட்டுள்ளார்.

பேராசிரியர் ஆஷூமாரசிங்க செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸ் கணினி குற்றப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## கல்வி tv CHANNEL-1

12.01.2023
வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

12.01.2023
வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# கல்முனை வைத்தியசாலைக்கு மருந்து பொருட்கள் அன்பளிப்பு

அம்பாறை, ஜன. 12

கொழும்பு மாநகர ரோட்டரி கழகத்தினது "மக்களுக்காக மக்களிடமிருந்து" என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலைக்கு ரூ.1.5 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் பிரதி வைத்திய அத்தியட்சகர் டாக்டர்.எஸ்.ராஜன்திரன் தலைமையில் நடைபெற்றது.

இலங்கையில் கோவிட்-19 பெருந்தொற்றினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட, உயிர் காக்கும் மருந்துகளுக்கான மிகப்பெரும் பற்றாக் குறையை எதிர்கொண்ட வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்கி வைக்கும் இத்திட்டம், முன்னாள் தலைவரான டாக்டர் பாஹிம் ஜமீலினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கொழும்பு மாநகர ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர்கள் பைஸல் பஹௌடீன் மற்றும் அமான் அஷ்ரப் ஆகி யோர் கொழும்பு மாநகர ரோட்டரி கழகத்தினை பிரதிநிதித் துவப்படுத்தி மருந்துகளை வழங்கி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் இணைப்பு செயலாளர் எம்.ஐ.எம்.முஸ்தாக்,எஸ்.எல். சனூஸ் பிரதான பொலிஸ் பரிசோரகர், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் பீ.எம்.றியாத் மற்றும் எம்.ஐ.எம்.ஜிப்ரி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சர்ஜூன் லாபீர் மற்றும் சுஹைல் ஜமால்தீன் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பிரதி வைத்திய அத்தியட்சகர் எஸ்.ராஜன்திரன் மற்றும் டாக்டர் யூ.எல்.சராப்டீன் பெற்றுக் கொண்டார். (அ)

# அமைச்சர் டக்ளஸின் கூற்றினால் சந்தேகம்!

## கூறுகிறார் முன்னாள் எம்.பி.கோடீஸ்வரன்

மட்டக்களப்பு, ஜன. 12

"அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமெனவும், அதனை மூன்று படிமுறைகளில் செய்யலாமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ள கருத்து தமிழ் மக்களுக்கு சந்தேசகத்தைத்தோற்றுவித்துள்ளது"

- இவ்வாறு முன்னாள் திகாமடுள்ள மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்ப பாராளுமனற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கூறினார்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில், பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்று வந்த தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தின் இறுதி நாள் பூர்த்தி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கொண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைபட்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமெனக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை உடனடியாகச் செய்ய வேண்டுமெனக் கூறாது மூன்று படிமுறைகளில் (கட்டங்களில்) செய்யலாமென கூறியிருப்பது தமிழ் மக்களின் சந்தேகத்தை வலுப்படுத்தியிருக்கின்றது.

பேரினவாத அரசாங்கம் தீர்வு வழங்கலை காலம் கடத்தும் நோக்குடன் அவ்வாறு கருத்து வெளியிடுமாறு அமைச்சரைத்தூண்டியிருக் கலாமென்ற சந்தேகமே மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் பிரித்தானியர் ஆட்சியில் தமிழர்களுக்கென்று



தனி இராச்சியமே இருந்தது.

ஆனால் கிடைத்த சுதந்திரமோ தமிழர்களைப் புறந்தள்ளி பெரும்பான்மை சமூகத்தவருக்கு மட்டுமானதாகவே அமைந்துள்ளது.

எனவே தான் 74 வருடங்கள் கடந்த எமது உரிமைப்போராட்ட வரலாற்றில் தமிழ்த்தலைமைகள் பல ஒப்பந்தங்கள் செய்தும் இன்னும் விடிவு கிடைக்கவில்லை.

எனினும் தமிழ் மக்களுக்கான சமஷ்டித் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான காலம் இன்று கனிந்துள்ளது.

எனவே ஒன்றுபட்ட குரலாக நாம் இதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

சர்வதேச நாடுகளினதும், நம்புலம் பெயர் அமைப்புக்களின் அழுத்தம் காரணமாகவும் இன்று ஏற்பட்டுள்ள சாதக நிலமையை நம்மவர்கள் பிரிந்து நிற்பதால் நலிவடையச் செய்து விடக் கூடாது - என்றார். (அ-06)

# சாதனையாளர்கள் கௌரவிப்பு



அம்பாறை, ஜன. 12

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின்(ஒஸ்கார்) கல்வித்திட்டங்களில் ஒன்றாக, காரைதீவு மாணவர்களிடையே கல்வியில் சாதனைபடைத்த மாணவர்களை கௌரவிக்குமுகமாகவும் ஏனைய மாணவ,மாணவியர்களை ஊக்குவிக்குமுகமாகவும் , 2022ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று காரைதீவில் உள்ள பாடசாலைகளில் இருந்து பல்கலைகழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக் கப்பட்டனர்.

காரைதீவு பாடசாலைகளில் இருந்து க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 29 மாணவ மாணவிகளுக்கும் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும், வைத்தியத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட 4 மாணவிகளுக்கும், பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிக்கும் மேலதிகமாக விசேட நினைவு சின்னங்களும் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டனர்.

விபுலானந்தா மத்திய கல்லூரி, சண்முகா மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் இந்த விழா சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

விபுலானந்த மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் அகில இலங்கைரீதியில் உயிரியல் துறையில் முதலிடத்தை பெற்று வைத்தியத் துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட செல்வன் துவாரகேஷ் தமிழ்வண்ணன் சிறப்புப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவுச்சின்னம் என்பன வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். (அ)

# மாணவர்களுக்கு ஹெரோயின் விற்பனை செய்தவர் சிக்கினார்



அம்பாறை, ஜன. 12

ஹெரோயின் போதைப் பொருளை நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்தனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை கடற்கரை வீதி பகுதி மக்பூலியா சந்திக்கருகில் சந்தேகத்திற்கிடமாக நபர் நடமாடு வது தொடர்பில் இரவு விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் ஒன்று கிடைத்தது. இதனையடுத்து இச்சோதனை நடவடிக்கையை கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டனர்.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு ஹெரோயின் போதைப்பொருளை சூட்சுமமாக விற்பனை செய்த 22 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் வசம் இருந்து 1 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபருடன் சான்றுப் பொருட்கள் பெரிய நீலாவணை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தப்பட்டன. (அ)

# வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி மீறக்கூடாது!

## அம்பாறை ஜம்இய்யதுல் உலமா வலியுறுத்து

அம்பாறை, ஜன. 12

இனப்பிரச்னைத் தீர்வில் முஸ்லிம்களுக்கு அநீதியிழைக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2002 காலப்பகுதியில் வழங்கியிருந்த வாக்குறுதியை மீறக் கூடாது என அம்பாறை மாவட்ட ஜம் இய்யதுல் உலமா வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து மேற்படி உலமா சபையின் சார்பில் அதன் தலைவர் எஸ்.எச். ஆதம்பாவா மௌலவி , ஏ.எல்.நாசிர் கனி மௌலவி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த போது 2002ஆம் ஆண்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அவர் தலைமையில் அரசு- புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அவ்வேளையில் 11.10.2002 ஆம் திகதியன்று கிழக்கு மாகாண ஜம்இய்யதுல் உலமாப் பிரதிநிதிகள் அதன் தலைவர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா தலைமையில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இவ்விடயம் பற்றி பேசியிருந்தோம். அவ்வேளையில், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்போது முஸ்லிம்களுக்கு எவ்வித அநீதியும் ஏற்பட இடமளிக்கப் படமாட்டாதென உறுதியளித்திருந்தார்.

அத்துடன் அரசியல தீர்வு தொடர்பாக தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் தீர்வுத் திட்டங்களின் ஆவணத்தில் முஸ்லிம்களுக்குரிய தீர்வுத் திட்டமும் உள்ளடக்கப்படுமென்றும் தெரிவித்திருந்தார். அந்த வாக்குறுதியை உரிய நேரத்தில் அவர் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் இரண்டு மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில், இம்மாகாணம் வேறு எந்த மாகாணத்தோடும் இணைக்கப்படுவதை முஸ்லிம்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற விடயத்தை இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இனப்பிரச்னைக்கான தீர்வை ஏற்றுக் கொள்ளும் நாம், ஒரு சமூகத்தின் பிரச்சினையைத் தீர்க்கப்போய் அதனால் மற்றொரு சமூகத்துக்கு பிரச்சினை ஏற்பட இடமளிக்கக் கூடாது என்ற விடயத்தையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்- என்றுள்ளது. (அ-06)

# ரஷ்ய பாதுகாப்பு செலவுக்கு நிகராக உக்ரைனுக்கு நிதி!

## மேற்கு நாடுகள் வழங்கியுள்ளன



கீவ், ஜன. 12

ரஷ்யாவின் சிறப்பு இராணுவ நடவடிக்கையின் தொடக்கத்திலிருந்து உக்ரைன் சுமார் 48.5 பில்லியன் டொலர் மேற்கத்திய இராணுவ உதவியைப் பெற்றுள்ளது. அதாவது, ரஷ்யாவின் 2022 வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு சமமான தொகை இது.

ரஷ்யாவின் கடந்த ஆண்டு பாதுகாப்பு செலவினங்களில் 51.1 பில்லியன் டொலர் ஆகும். இதன் 95 வீத தொகையை உக்ரைன் மேற்கத்திய இராணுவ உதவியாக பெற்றுள்ளது.

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையின் தொடக்கத்திலிருந்து மேற்கத்திய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து உக்ரைன் அரசாங்கம் கிட்டத்தட்ட150.8 பில்லியன் டொலருக்கும் அதிக உதவியை பெற்றுள்ளது.

பெப்ரவரி 2022 இன் பிற்பகுதியில் இருந்து உக்ரைனுக்கான மொத்த மேற்கத்திய உதவியானது உக்ரைனிய பட்ஜெட்டை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், “அனைத்து முக்கிய நேட்டோ உறுப்பினர்களின் இராணுவ திறன் மற்றும் திறன்கள் தற்போது ரஷ்யாவிற்கு எதிராக தீவிரமாக பயன்படுத்தப்படுகின்றன” என்று கூறினார்.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு, ரஷ்யா உக்ரைன் படைகளுக்கு எதிராக அல்ல, மாறாக முழு “கூட்டு மேற்கு நாடுகளுக்கு” எதிராக போராடுகிறது என்றார். (அ)



# தென் கொரியர்களுக்கு விசா; இடைநிறுத்தியுள்ள சீன அரசு!

பீஜிங், ஜன. 12

சீனாவில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வருவதன் காரணமாக அந்த நாட்டில் இருந்து வரும் பயணிகளுக்கு பல நாடுகள் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

இந்தியா, அமெரிக்கா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் இதில் அடங்குகின்றன.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த சீனா, பரஸ்பர கொள்கையின் அடிப்படையில் எதிர் நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக எச்சரித்திருந்தது.

இதன் அடிப்படையில், தென்கொரிய மக்களுக்கு விசா வழங்குவதை நிறுத்தி வைப்பதாக சீனா அறிவித்துள்ளது.

இதுகுறித்து தென்கொரியாவில் உள்ள சீன தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், தென்கொரியா, சீன பயணிகள் மீதான பாரபட்சமான நடவடிக்கைகளை நீக்கும் வரை அந்த நாட்டில் இருந்து சீனாவுக்கு சுற்றுலா மற்றும் வணிகத்துக்காக வருபவர்களுக்குரிய விசா நிறுத்தி வைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (அ)

# 710 ரஷ்ய சிப்பாய்கள் ஒரே நாளில் மரணம்!

## உக்ரைன் அறிவிப்பு



கீவ், ஜன. 12

தங்களுக்கு எதிரான போரில் ஒரே நாளில் 710 ரஷ்ய சிப்பாய்கள் உயிரிழந்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இது குறித்து பேசிய உக்ரைன் ஜனாதிபதி ஸெலன்ஸ்கி, பாக்முட் நகரின் வீதிகளில் ரஷ்ய வீரர்களின் உடல்கள் குவிந்து கிடப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் உக்ரைனின் உப்பு சுரங்க நகரம் எனக் கூறப்படும் சோலேடார் நகரில் இரு தரப்புக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த 10 மாத கால யுத்தத்தில் ஒரே நாளில் 710 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளதாக உக்ரைன் இராணுவம் கூறியுள்ளது. (அ)

# பெருவில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை!



தென் அமெரிக்க நாடான பெருவில் அரசுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டமானது வன்முறையாக வெடித்தது.

சிறையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி பெட்ரோ காஸ்டிலோவை விடுவிக்கக் கோரி அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மேலும் புதிய ஜனாதிபதி டினா போலுவார்ட் பதவி விலக வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் ஜூலியாகா எனும் இடத்தில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த கலவரத்தில் 17 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும், 68 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. (அ)

# உலகளவில் மந்தநிலை!

## உலக வங்கி எச்சரிக்கை




நியூயோர்க், ஜன. 12

உலகப் பொருளாதாரம் மந்தநிலையில் விழும் அபாயத்திற்கு அருகில் உள்ளது என உலக வங்கியின் சமீபத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஜூன் மாதத்தில் கணிக்கப்பட்டதை விட இந்த ஆண்டு உலகப் பொருளாதாரம் 1.7 வீதம் மட்டுமே வளரும் என் எதிர்பார்ப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உக்ரைன்-ரஷ்யா மோதல் மற்றும் கொரோனா தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து உருவாகும் பல காரணிகளே இதற்கு மகாரணம என அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

உலகளவில் மந்தநிலை ஏற்பட்டால், 1930 களுக்குப் பிறகு ஒரே தசாப்தத்தில் இரண்டு முறை மந்தநிலைகள் பதிவாவது இதுவே முதல் முறை என்றும் உலக வங்கி கூறியுள்ளது. (அ)

## பிரேசில் வன்முறை;

# உயர் அதிகாரிகளை கைது செய்ய பணிப்பு




பிரேசிலியா, ஜன. 12

பிரேசில் தலைநகரில் இடம் பெற்ற வன்முறைகளை அடுத்து உயர்மட்ட அதிகாரிகளை கைது செய்ய அந்த நாட்டு நீதித்துறை உத்தரவிட்டுள்ளது.

இதன்முதற்கட்டதாக அங்கு இடம்பெற்ற வன்முறைகளுக்கு பொறுப்பானவர் என கூறப்படும் இராணுவ பொலிஸாரின் முன்னாள் தளபதி ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளதாக பிரேசில் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பிரேசில் புதிய ஜனாதிபதி லூயிஸ் இனசியா லூலா டி சில்வாவின் வெற்றியை ஏற்க மறுத்த அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பொல்சானாரோவின் ஆதரவாளர்கள் தலைநகரில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறையில் ஈடுபட்டிருந்தனர்.

உயர் நீதிமன்றம் கட்டடத்தை முற்றுகையிட்டதுடன், ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி பிரவேசித்தும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து, வன்முறைகளில் ஈடுபட்ட ஆயிரத்திற்கு அதிகமானோர் அந்த நாட்டு பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சானக இறுதிவரை போராட்டம்; இந்தியா 67 ஓட்டங்களால் வெற்றி!



கவுகாத்தி, ஜன. 12

இலங்கை அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. 374 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 306 ஓட்டங்களை எட்டியிருந்தது. அந்த அணியின் அணித் தலைவர் சானக அபாரமாக விளையாடி சதம் விளாசினார்.

இலங்கை அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. அண்மையில் நடந்து முடிந்த இருபது - 20 தொடரை 1-2 என்ற கணக்கில் அந்த அணி இழந்தது. தற்போது 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணியுடன் விளையாடி வருகிறது. கவுகாத்தியில் நடைபெற்ற இந்தப் போட்டி தொடரின் முதல் போட்டி.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 7 விக்கெட்கள் இழப்பிற்கு 373 ஓட்டங்கள் குவித்தது. 374 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இலங்கை அணி விரட்டியது.

அந்த அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை ஒரு பக்கம் இழந்தது. இருந்தாலும் அணித் தலைவர் , தொடக்க ஆட்டக்காரர் நிசங்க (72 ஓட்டங்கள்), தனஞ்சய டி சில்வா (47 ஓட்டங்கள்) ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்திருந்தனர். சானக இறுதி வரை ஆட்டமிழக்காமல் 88 பந்துகளில் 108 ஓட்டங்கள் குவித்திருந்தார். 9ஆவது விக்கெட்டுக்கு ராஜித உடன் 100 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்திருந்தார் அவர். 50 ஓவர்கள் முடிவில் அந்த அணி 306 ஓட்டங்களை எட்டி இருந்தது. அதன் மூலம் இந்திய அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முன்னதாக, முதல் இனிங்ஸில் இந்திய அணிக்காக தலைவர் ரோஹித் சர்மா மற்றும் ஷூப்மன் கில் தொடக்க வீரர்களாகக் களம் கண்டனர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 143 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். கில் 70 ஓட்டங்களிலும், ரோஹித் 83 ஓட்டங்களிலும் விக்கெட்டை இழந்தனர்.

கோலி மற்றும் ஸ்ரேயாஸ் ஐயர் இடையே சிறிய இணைப்பாட்டம் உருவானது. இருந்தாலும் ஸ்ரேயாஸ், 28 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து ராகுலுடன் 90 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் கோலி. ராகுல் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய கோலி, ஒருநாள் கிரிக்கெட்டில் தனது 45ஆவது சதத்தை பதிவு செய்தார். அவர் 87 பந்துகளில் 113 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஹார்திக் 14 ஓட்டங்களிலும் அக்சர் பட்டேல் 9 ஓட்டங்களிலும் விக்கெட்டை இழந்தனர். இந்திய அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 373 ஓட்டங்களை குவித்திருந்தது.

# சானகவை ரன் அவுட் செய்யாத ரோஹித்துக்கு கைஃப் பாராட்டு



புதுடில்லி, ஜன. 12

சானகவை ரன் அவுட் செய்யாத ரோஹித் சர்மாவைப் பாராட்டியுள்ளார் இந்திய முன்னாள் வீரர் முஹமது கைஃப்.

நேற்று முன்தினம் இலங்கையுடனான போட்டியின் கடைசி ஓவரில் இலங்கையின் தலைவர் 98 ஓட்டங்களில் இருந்தபோது, மறுமுனையில் ரன் அவுட் செய்தார் பந்துவீச்சாளர் ஷமி.

மூன்றாம் நடுவர் இதுகுறித்த முடிவை அறிவிக்கும் முன்பு அதை மீளப் பெற்றுக்கொண்டார் ரோஹித் சர்மா. இதுபோல மறுமுனையில் ரன் அவுட் செய்த அஸ்வின், தீப்தி சர்மா ஆகியோர் சர்ச்சைகளுக்கு ஆளானதாலும் இந்திய அணியின் வெற்றி அப்போது உறுதியாகியிருந்ததாலும் இந்த முடிவை மேற்கொண்டார் ரோஹித் சர்மா.

சானக 98 ஓட்டங்களில் இருந்தார். இதுபோல அவரை ஆட்டமிழக்க செய்ய விரும்பவில்லை எனத் தெரிவித்தார் ரோஹித் சர்மா. அவருடைய இந்த முடிவு குறித்து இந்திய முன்னாள் வீரர் முஹமது கைஃப் ட்விட்டரில் கூறியதாவது:

ரோஹித் சர்மா தனது அணியின் முறையீட்டை மீளப் பெற்றுக்கொண்டது அவருடைய தலைமைப் பண்பை வெளிப்படுத்துகிறது. அவருக்கு வெற்றி தேவை. ஆனால் அதற்காக எந்தச் செயலிலும் ஈடுபட்டு அதைப் பெற மாட்டார். இதில் சரி, தவறு இல்லை. உங்கள் மனசாட்சி என்ன சொல்கிறதோ அதுதான் என்று கூறியுள்ளார்.

# இந்தியாவுடனான டெஸ்ட் ஆஸி. அணி அறிவிப்பு!

சிட்னி, ஜன. 12

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட்கள், 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர், பெப்ரவரி 9 முதல் தொடங்குகிறது.

இந்த டெஸ்ட் தொடரில் விளையாடும் அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக பிரபல வேகப்பந்து வீச்சாளர் மிற்செல் ஸ்டார்க், முதல் டெஸ்டில் விளையாடமாட்டார். இந்த அணியில் நதன் லயன், அஷ்டன் அகர், மிட்செல் ஸ்வெப்சன், முர்பி என நான்குச் சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளார்கள்.

**அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி**

பட் கம்மின்ஸ் (அணித்தலைவர்), ஸ்டீவ் ஸ்மித் (உப தலைவர்), அலெக்ஸ் கேரி (விக்கெட் காப்பாளர்), டேவிட் வோர்ணர், உஸ்மான் கவாஜா, லபுஷன், டிராவிஸ் ஹெட், மேட் ரென்ஷா, பீற்றர் ஹேண்ட்ஸ்காம்ப், கமரூன் கிரீன், நாதன் லயன், அஷ்டன் அகர், மிட்செல் ஸ்வெப்சன், முர்பி, ஸ்டார்க், ஹசில்வூட், போலண்ட், லான்ஸ் மாரிஸ்.





# சச்சினின் சாதனையை சமன் செய்தார் கோலி!

கவுகாத்தி, ஜன. 12

இலங்கையுடனான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி 113 ஓட்டங்கள் விளாசி அசத்தினார். சர்வதேச ஒருநாள் போட்டியில் இது அவரின் 45ஆவது சதமாக அமைந்தது.

இதேவேளையில் சொந்த மண்ணில் விராட் கோலி அடித்துள்ள 20ஆவது சதமாகவும் இது அமைந்தது. இந்த வகையில் இதற்கு முன்னர் சொந்த மண்ணில் சச்சின் டெண்டுல்கர் மட்டுமே 20 சதங்கள் விளாசியிருந்தார். தற்போது விராட் கோலி அந்த சாதனையை டெண்டுல்கருடன் பகிர்ந்துகொண்டுள்ளார்.

விராட் கோலி இந்த மைல்கல்லை 99 இனிங்ஸ்களில் எட்டியுள்ளார். சச்சின் டெண்டுல்கர் 160 இனிங்ஸ்களில் 20 சதங்களை அடித்திருந்தார். உலக கிரிக்கெட் அரங்கில் இவர்களுக்கு அடுத்த இடங்களில் தென்னாபிரிக்காவின் ஹசிம் ஆம்லா, அவுஸ்திரேலியாவின் றிக்கி பொண்டிங் ஆகியோர் உள்ளனர். இவர்கள் இருவரும் தலா 14 சதங்களை சொந்த மண்ணில் அடித்திருந்தனர்.

சச்சினின் மற்றொரு சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார். இலங்கை அணிக்கு எதிராக இந்திய வீரர்களில் சச்சின் மட்டுமே அதிகபட்சமாக 8 சதங்கள் விளாசியிருந்தார். இந்த சாதனையை தற்போது விராட் கோலி முறியடித்துள்ளார்.

தற்போது விளையாடி வரும் வீரர்களில் விராட் கோலி 'சதங்களின் அரசன்' ஆக உருவெடுத்துள்ளார். டெஸ்ட் (27 சதங்கள்), ஒருநாள் கிரிக்கெட் போட்டி (45 சதங்கள்), இருபது - 20 கிரிக்கெட் (ஒரு சதம்) என அனைத்து வடிவிலான கிரிக்கெட் போட்டியிலும் இதுவரை விராட் கோலி 73 சதங்களை அடித்துள்ளார். அவருக்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்ணர் 45 சதங்களும், இங்கிலாந்தின் ஜோ ரூட் 44 சதங்களும், அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் 42 சதங்களும், இந்திய அணியின் கப்டன் ரோஹித் சர்மா 41 சதங்களும் விளாசி உள்ளனர். (ஐ)

# ஐ. பி. எல். ரி - 20 தொடரில் பந்த் விளையாடமாட்டார்!



புதுடில்லி, ஜன. 12

விபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக ஐ. பி. எல். 2023 போட்டியில் ரிஷப் பந்த் விளையாட மாட்டார் என முன்னாள் வீரர் கங்குலி தெரிவித்துள்ளார்.

ரிஷப் பந்த கார் விபத்தில் படுகாயத்துக்கு உள்ளாகி தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் ரிஷப் பந்தின் உடல்நிலை பற்றி இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரும் இந்திய முன்னாள் தலைவருமான கங்குலி கூறுகையில்,

ஐ. பி. எல் போட்டியில் ரிஷப் பந்த் விளையாட மாட்டார். டில்லி கப்பிடல்ஸ் அணியுடன் தொடர்பில் உள்ளேன். ஐ. பி. எல். போட்டியில் டில்லி அணி நன்றாக விளையாடும். ஆனால், ரிஷப் பந்துக்கு ஏற்பட்ட காயம் டில்லி அணிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

டில்லி கப்பிடல்ஸ் அணியின் இயக்குநராக சௌரவ் கங்குலி நியமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# முஸ்லிம்கள், பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க ரணில் முடிவு!

## வடக்கு-கிழக்கு மக்கள் பிரச்னைகளுக்கு தீர்வு கண்ட பின் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜன. 12

**தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக் கொடுத்த பின்னர் பெருந்தோட்ட மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்னைகளை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.**

வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள பின்னணியிலேயே ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் நடைபெற்ற சர்வகட்சி கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு அமைய ரணில் விக்கிரமசிங்க அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கூறினார்.

தமிழ் மக்களின் பல பிரச்னைகளுக்கு ஏற்கனவே தீர்வு காணத் தொடங்கியுள்ள நிலையில், பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஜனாதிபதி உத்தேசித்துள்ளதாக ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கிய தன் பின்னர், இந்நாட்டில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்துள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பெருந்தோட்ட மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் பேச ஜனாதிபதி மேலும் உத்தேசித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அச்சுவேலியில் மதுபோதையில் வீட்டுக்குத் தீ வைத்தவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 12

மதுபோதையில் வீட்டுக்கு வந்து, மனைவியுடன் முரண்பட்டவர், குடியிருக்கும் வீட்டைத் தீ வைத்து கொளுத்தியுள்ளார்.

அச்சுவேலி பாரதி வீதியில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் வீடு பகுதியளவில் எரிந்துள்ளது.

வீட்டுக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் அச்சுவேலிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் நிறை போதையில் வீட்டுக்கு வந்து மனைவி, பிள்ளைகளுடன் சண்டையிட்டு அவர்களை வீட்டின் வெளியே துரத்தி வீட்டை பூட்டி ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளார். அதன் பின்னர் வீட்டுக்கு தீ வைத்துள்ளார்.

வீட்டில் தீ பரவியதை அடுத்து அயலவர்கள் ஒன்று கூடி பலத்த சிரமத்தின் மத்தியில் தீயை அணைத்தனர். இருந்தபோதிலும் வீடு பகுதியளவில் எரிந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வீட்டுக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தரை கைது செய்தனர். (அ)

## பொதுநலவாய பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் கொழும்பில்!

கொழும்பு, ஜன. 12

பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகம் ஸ்டீபன் ட்விக் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

நேற்று புதன்கிழமை அதிகாலை 12 மணியளவில் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் ஸ்டீபன் ட்விக்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழுவினர் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

இந்த விஜயத்தின்போது அவர் பல்வேறு முக்கியஸ்தர்களைச் சந்தித்து பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை சட்டவிரோதம்


### கூறுகிறார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, ஜன. 12

கட்டுப்பணம் பெறுவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பொதுநிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை சட்டவிரோதமானது என டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணம் பெறுவதை தற்காலிகமாக இடைநிறுத்தி நேற்று முன்தினம் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த சுற்றறிக்கை தொடர்பாக குவிட்டரில் வெளியிட்டுள்ள கருத்திலேயே டலஸ்



அழகப்பெரும இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த சட்டத்திற்கு புறம்பான, சட்டவிரோதமான உத்தரவை தைரியமான எந்தவொரு அரச அதிகாரியும் பின்பற்றமாட்டார்கள் என்றும் டலஸ் அழகப்பெரும கூறினார். (அ)

## மஹாநாம, திஸாநாயக்கவின் சிறையை உறுதிப்படுத்தியுள்ளது உயர் நீதிமன்றம்!

கொழும்பு, ஜன. 12

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிக்குழாமின் முன்னாள் பிரதானி ஐ.எச்.கே. மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி. திஸாநாயக்க ஆகியோரின் சிறைத் தண்டனை உறுதி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

20 மில்லியன் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு மூவரடங்கிய கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் சிறைத் தண்டனை வழங்கியது.

அதற்கமைய, ஐ.எச்.கே. மஹாநாமவுக்கு, 20 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 65,000 அபராதமும் பியதாஸ திஸாநாயக்கவுக்கு 12 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 55,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

இவர்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதமளவில், கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கு சொந்தமான இரும்புகளை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவது தொடர்பாக 54 கோடியை இலஞ்சமாக பெறுவதற்கு முயன்றுள்ளனர்.

அதற்கான முற்பணமாக 20 மில்லியன் ரூபாய் பணத்தை, கொழும்பிலுள்ள சொகுசு ஹோட்டல் ஒன்றில் வாகனத் தரிப்பிடத்தில் வைத்து கைமாற்றியபோது, இலஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரிகளால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

## தொழிலாளர் காங்கிரஸின் பொங்கல் நிகழ்வு இரத்து



கொழும்பு, ஜன. 12

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இந்த வருடத்துக்கான தைப்பொங்கல் நிகழ்வுகள் இம்முறை இடம்பெறாது என கட்சியின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தைபொங்கல் நிகழ்வுக்காக செலவழிக்க திட்டமிடப்பட்டுள்ள பணத்தொகை மலையக மக்களின் நிவாரணத் திட்டத்துக்கும், மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையும் இதற்கும் ஒரு காரணம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## புலமைப்பரிசில் பெறுபேறு இந்த மாதம் வெளியாகும்!

கொழும்பு, ஜன. 12

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை இம்மாதத்திற்குள் வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது பரீட்சை விடைத் தாள்களை மதிப்பிடும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்னும் இரண்டு நாட்களில் பணிகள் நிறைவடையும் என்றும் அதன் பின்னர் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது. (அ)

## யாழ்.மாநகர எல்லைக்குள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

### 09 பேருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை யின்போது 09 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், 111 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு சிவப்பு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாக மாநகர சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

பருவ மழையை அடுத்து யாழ்ப்பாணத்தில் டெங்கு நுளம்பின் அதிகரிப்பு காரணமாக டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகரித்தது.

கடந்த ஆண்டில் 09 பேர் டெங்குக் காய்ச்சலினால் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்திருந்தனர்.

இந்நிலையில் யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது, ஆயிரத்து 505 குடியிருப்புக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதன்போது 74 குடியிருப்புக்களில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டன. அதில் 65 குடியிருப்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், 09 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதேவேளை, டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட 111 குடியிருப்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழரசு...

னோம். பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கும் கடிதம் எழுதினோம்.

இதன்போது, எல்லோரும் ஒற்றுமையாக செயல்பட்டதால் ஏனைய தேசிய கட்சிகளையும் உள்ளெடுப்பது சம்மந்தமாக சம்பந்தன் ஐயாவுடனும் பேசினோம் - கடிதமும் எழுதினோம். ஆனால், அந்த கடிதத்துக்கான பதில் வருவதற்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடுகின்ற முடிவை எடுத்திருந்தார்கள். அந்தவகையில், நாங்கள் வைத்த கோரிக்கைக்கு பதில் தராது இந்த முடிவை எடுத்து வெளியில் செல்லும் நிலையை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

கூட்டமைப்பில் இருந்து வெளியே சென்ற கட்சிகளில் உள்ளே வர வேண்டும் என கருதிய கட்சிகள் எல்லோரும் அணிதிரண்டுள்ளோம். குறிப்பாக இந்த சந்தர்ப்பத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் எமது கூட்டில் இணைய வேண்டும் என வேண்டுகோள் விடுகின்றேன். தமிழ் மக்களின் பிரச்னையை வென்றுறெடுப்பதற்கு நாங்கள் பலமான கூட்டாக ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். அதனடிப்படையில் இந்த கூட்டில் வந்து இணைய வேண்டும் என நான் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

எனவே, கூட்டு என்பது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட நோக்கத்தின் அடிப்படையில் செயல்படும். அதில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பங்களிப்பு இருக்கும். தனிப்பட்ட கட்சிகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டுக் கொடுக்க முடியாது. மட்டக்களப்பில் நடந்த கூட்டத்தில் தனித்து செல்ல தமிழரசுக் கட்சி முடிவெடுத்தது. ஆனால், மட்டக்களப்பு மாவட்ட பத்திரிகையாளர்கள் இந்த கூட்டமைப்பு உருவாக்கத்தில் முன்னின்று செயல்பட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக இந்த தேர்தலில் போட்டியிடும். தொடர்ச்சியாக 6 கட்சிகள் ஒற்றுமையாக பயணித்தோம்.

தேர்தல் தொடர்பில் எங்கள் கடிதத்தில் எதுவும் தெரிவிக்கவில்லை. அவர்களின் முடிவு கவலையளிக்கிறது. மக்கள் ஒற்றுமையைத்தான் விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் தனித்துவத்தை காட்ட வேண்டும் என நினைக்கிறார்களா எனத் தெரியவில்லை.

கூட்டமைப்பில் இருந்து ஒரு கட்சி விலகிச் சென்றாலும், முன்னர் விலகிச் சென்றவர்கள் உள்ளே வந்துள்ளார்கள். அந்த அடிப்படையில் மக்கள் எமக்கு ஆதரவு தருவார்கள். கூட்டமைப்பு சிதைவுபட முடியாது. மக்கள் எமது பக்கம் இருப்பார்கள். தற்போது தேர்தல் ஒன்று வந்துள்ளது. தேர்தல்தான் எங்களது குறிக்கோள் அல்ல. இந்தத் தேர்தல் முடிந்தபின் சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட கட்டமைப்பை உருவாகின்ற, தொடர்ச்சியான தலைமைத்துவத்தை கொண்டிருக்கின்ற, மக்களின் ஆலோசனைகளைப் பெறுகின்ற செயல்பாடுகளை செய்ய இருக்கின்றோம். தனிப்பட்ட கட்சிகளின் விருப்பு - வெறுப்பு இங்கு இருக்காது. இது ஒரு கூட்டு. சுழற்சி முறையில் தலைமைத்துவம் பேணப்படும். நாம் பிளவுபடாமல் மக்களது நம்பிக்கையை வீண்போகாது, மக்களது நலனை முன்னிறுத்தி கட்டுக்கோப்பாக செயல்பட வேண்டும். அதற்கு கூட்டமைப்பு பதிவு செய்யப்படும். பொது சின்னம் தெரிவு செய்யப்படும். தற்போது பொது சின்னத்தில் போட்டியிட வாய்ப்புள்ளது - என்றார்.

## மந்தபோசணைப்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மந்த போசாணையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையில் சடுதியாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்திப்பதற்காக திரிபோசா உற்பத்தியை மீள ஆரம்பித்து கர்ப்பவதி பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உலக உணவு திட்டம் போன்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் போசாக்கு உணவு பொதிகளை வழங்குவதுடன் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கும் விசேட நிதியுதவி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை வலுப்படுத்த முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை திரிபோசா உற்பத்தி ஓரளவு வழமை நிலைமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

உலக உணவு திட்டத்தின் ஊடாக சோளம், சோயா போன்றவற்றின் மூலப்பொருட்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதேவேளை சிறுவர்களின் இரும்பு சத்து குறைபாட்டை குறைப்பதற்காக உணவில் சேர்க்க வேண்டிய போசாக்கு தூள் பக்கெட்டுக்கள் வழங்கப்படுகிறது. மேலும் 6 மாதம் முதல் 3 வயது பிள்ளைகளுக்கு பகல் உணவுடன் இதனை வழங்க முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## 13 கட்சிகள்...

தெரிவு செய்துள்ள இந்தக் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று சிறீ லங்கா சுதந்திர் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன,

மக்களின் முழுமையான ஆதரவுடன் நாம் முழு நாட்டிலும் வெற்றி பெறுவோம். 90 சதவீத வெற்றியை எம்மால் பதிவு செய்ய முடியும். வடக்கு, கிழக்கில் நாம் போட்டியிடுவோம். இந்த கூட்டணியால் நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். இதற்கு மக்கள் ஆதரவு வழங்குவார்கள் என்று நம்புகின்றோம்." என்றார்.

ஜன ஜய பெரமுனவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா உரையாற்றுகையில் ,

"நாட்டில் ஏற்பட்ட உள்ளக பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாத நிலைமைக்கான காரணம் அரசியல் முறைமைகளில் காணப்பட்ட தவறுகளாகும். ஆட்சி மாற்றத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்த்த எதுவுமே இடம்பெறவில்லை. எனவே எமது இந்த கூட்டணிக்கு சரியான பாதையில் பயணிக்க வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தீர்க்கமானதாகும். தலைவர்களின் பின்னால் செல்லும் அரசியல் கலாசாரம் மாற்றம் பெற வேண்டும். எனவேதான் இந்தக் கூட்டணியை தலைவர் ஒருவரின் கீழ் வழிநடத்தாமல் தலைமைத்துவ சபையை அமைத்துள்ளோம் - என்றார்.

விமல் வீரவன்ஸ பேசுகையில்,

"சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள இந்த பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்பதற்கு புதிய அரசியல் முறைமையொன்று அத்தியாவசியமானதாகும். அந்த பொறுப்பையே நாம் தற்போது ஏற்றுள்ளோம். இலங்கையின் நிதி நெருக்கடியின் பாரதூர தன்மை குறித்து பல்வேறு நாடுகளையும் சேர்ந்த நிபுணர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். இவ்வாறான அபாயமான நிலைமையிலிருந்து நாட்டை மீட்ப்பதற்கு எந்தவொரு முடிவினையும் எடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்." என்றார்.

டலஸ் அழகப்பெரும உரையாற்றுகையில்,

"கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான 23 கட்சிகள் நாட்டுக்கான தீர்க்கமான தீர்மானத்தை எடுத்தன. அதே போன்று ஒற்றுமையுடன் புதிய கூட்டணியில் எதிர்காலத்திலும் பயணிக்க வேண்டும். இந்தக் கூட்டணியில் 12 பிரதான கட்சிகள் உள்ளன. இவற்றில் 36 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். 22 தேர்தல் மாவட்டங்களில் 17 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் உள்ளனர் - என்றார். (ஐ)

## நடவடிக்கையில்...

ளர்களுக்கு நேற்று அனுப்பிய சுற்றறிக்கை தொடர்பாக விளக்கமளிக்க அவர் அழைக்கப்படுகிறார் என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை ஏற்பதை நிறுத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் நேற்று முன்தினம் மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து குறித்த கடிதம் மீளப்பெறப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. முன்னதாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளுமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## தேர்தல்...

லளித்த அவர்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட்டதாக எனக்கு தெரியவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் பாராளுமன்ற குழுவுக்கும் இரா. சம்பந்தனே தலைமை வகித்துக் கொண்டிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் பாராளுமன்றத்திலும் சர்வதேச சமூகத்திலும் அடையாளமாகக் கொண்டிருக்கிறது. இது ஓர் உள்ளூர் அதிகார சபை தேர்தல். இந்த தேர்தலின் வடிவம், தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில் மக்கள் உறுப்பினர்களை தெரிவு செய்யவுள்ளனர். அதற்கான களப்பரீட்சையாக பார்க்கலாம். இதில் சாதக, பாதக நிலை ஏற்படலாம்.

இன்று (நேற்று) வெளியான செய்திகளின் அடிப்படையில், எமது தலைவர் ஓரீரு நாட்களில் இது தொடர்பில் அறிக்கை ஒன்றின் ஊடாக தெளிவுபடுத்த உள்ளதாக அறிய முடிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் ஏன் தனித்தனியாக போட்டியிட வேண்டிய தேவை ஏற்பட்டது என்பது தொடர்பில் அவர் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

ஆகவே பொறுப்பு வாய்ந்த கட்சியின் உறுப்பினர் என்ற வகையில், அவருடைய அறிக்கை வரும்வரை பொறுமையோடும் - நிதானத்தோடும் இந்த விடயங்களை கையாள்வதே பொருத்தம் எனக் கருதுகிறேன் - என்றார். (ஐ -02)

## இந்த...

9.2 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என மதிப்பிடப்படுகின்றது.

இலங்கையின் அதிகாரிகள் ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை -உணவு, மருந்து, எரிபொருள் தட்டுப்பாடுகளை மக்கள் எதிர்நோக்குவது குறித்து உலக வங்கி கவலை வெளியிட்டுள்ளது.

நெருக்கடி மற்றும் அதன் விளைவுகள் வறுமையை அதிகரித்துள்ளது. அத்துடன், கடந்த தசாப்த காலத்தில் பெறப்பட்ட பலாபலன்களை இல்லாமல் செய்துள்ளன. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 4.3 வீதத்தால் வீழ்ச்சியடையும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

தொடரும் அந்நியசெலாவணி பிரச்னைகள் - உயர் பணவீக்கத்தின் தாக்கம் - முக்கிய வர்த்தக சகாக்களின் பொருளாதார வளர்ச்சி - வீழ்ச்சி காரணமாக 2023ஆம் ஆண்டு குறித்து முன்னர் எதிர்வு கூறப்பட்டவற்றை மாற்றவேண்டிய நிலையேற்பட்டுள்ளது என உலக வங்கி தெரிவித்துள்ளது.

தெற்காசியா குறித்து தெரிவித்துள்ள உலக வங்கி உக்ரைன் யுத்தத்தின் தாக்கங்களை இந்த பிராந்தியம் தொடர்ந்தும் அதிகரிக்கின்றது எனத் தெரிவித்துள்ளது. அத்துடன், தெற்காசிய பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி 2023 இல் 5.3 வீதமாக காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் தீர்ப்பு இன்று!

போதிய உளவுத் தகவல்கள் இருந்தும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்க தவறியதன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன என்று கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தாக்கல் செய்த இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் மீதான விசாரணைகள் கடந்த 2022 ஒக்ரோபர் 5ஆம் திகதி நிறைவுக்கு வந்தன.

உயர் நீதிமன்றம் வழக்கை நிறைவுறுத்தி அனைத்து தரப்பினரும் தமது எழுத்து மூல சமர்ப்பணங்களை கடந்த 2022 ஒக்ரோபர் 5 ஆம் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்திருந்தது. இவ்வாறான நிலையில் திகதி அறிவிப்பு இன்றி இந்த வழக்கின் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வழக்கை விசாரணை செய்த நீதியரசர்கள் குழாமில் உள்ளடங்கும் நீதியரசர் தெஹிதெனிய நாளை - 13ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார். இந்நிலையில், இன்று வியாழக்கிழமை வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரசின்...

டுள்ளது.

இந்தத் தகவலை தென்னாபிரிக்காவின் சட்டத்தரணி யஸ்மின் சூக்காவின் சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்ட இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

அக்காலத்தில் கோட்டபாய ராஜபக்ஷ மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தின் அதிகம் அறியப்படாத மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளராக இருந்தார்.

அப்போது குறைந்தது 700 பேர் - முக்கியமாக சிங்களவர்கள் - அவரின் கட்டளையின் கீழ் படையினரால் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது, ஜே. வி. பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி சம்பந்தப்பட்ட இரண்டாவது வன்முறைக் காலகட்டமாகும்.

## கனடாவின்...

படையாகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு எதிராக நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை கனேடிய அரசாங்கம் தடைகளை விதித்தது.

இந்நிலையிலேயே நேற்றைய தினம் கனடிய உயர்ஸ்தானிகரை, வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு வரவழைத்து அமைச்சர் இலங்கையின் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தமை இந்த முக்கியமான தருணத்தில் பொறுப்பற்ற செயலாகும். நிலுவையில் உள்ள பிரச்னைகளுக்கு தீர்வு கண்டு, நல்லிணக்கத்தை அடைவதற்காக ஆழமான பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களில் நாடு ஈடுபட்டுள்ள வேளையிலேயே இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

கனடாவின் இந்த நடவடிக்கையானது தற்போதைய சந்தர்ப்பத்தில் உதவியற்றதும் , இலங்கையிலுள்ள சமூகத்தினரை ஓரங்கட்டுவதைப் போன்ற செயல்பாடுமாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மகிந்த,...

கனடாவுக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது

இலங்கையில் மனித உரிமை மீறல்களைச் செய்தவர்கள் தொடர்ந்தும் தண்டனையில் இருந்து தப்பிப்பதை கனடா ஒருபோதும் ஏற்காது என்ற செய்தியை இந்தத் தடைகள் எடுத்து காட்டுவதாக கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி குறிப்பிட்டிருந்தார்.

ஈழநாடு
Eelanadu

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு சட்டரீதியாக தடையில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 12

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு சட்ட ரீதியாக தடையில்லை என அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.**

இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் நேற்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டனர். இந்த சந்திப்பின்போதே, தேர்தல் ஆணைக்குழு இதனைத் தெரிவித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் தொடரும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

(அ)

# தொண்டைமானாறு நீரேரியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு



யாழ்ப்பாணம், ஜன. 12

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்கு பின்புறமாக உள்ள கடல் நீரேரியில் இருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை அப்பகுதியில் நீராடச் சென்றவர்கள் சடலமொன்று மிதப்பதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நீரில் மூழ்கிய நிலையில் முதியவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

ஆலயத்துக்கு வந்த முதியவர் நீரேரியில் நீராட முற்பட்ட சந்தர்ப்பத்தில் நீரில் மூழ்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பறவைக் காய்ச்சல் அச்சத்தினால் முட்டை இறக்குமதி அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜன. 12

பறவைக் காய்ச்சல் பாதிப்பு காரணமாக இந்தியாவில் இருந்து முட்டைகளை நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், முட்டை ஏற்றுமதியில் ஈடுபடும் பிரதான நாடுகளிலும் பறவைக் காய்ச்சல் பரவிவருவதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் முட்டைக்கான தட்டுப்பாடு காரணமாக, இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும், இந்தியாவின் சில மாநிலங்களில் பரவிவரும் பறவைக் காய்ச்சல் காரணமாக, அங்கிருந்து முட்டைகளை நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கு கால்நடை சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்க மறுத்திருந்தது.

அத்துடன் பறவைக்காய்ச்சல் இல்லாத நாடுகளில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டிருந்தது.

எவ்வாறாயினும், முட்டை ஏற்றுமதியில் ஈடுபடும் பிரதான நாடுகளில் நெதர்லாந்து, துருக்கி, போலந்து, அமெரிக்கா, மலேசியா, ஜேர்மனி, சீனா,ஸ்பெயின், பெல்ஜியம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முதன்மை வகிக்கின்றன.

இந்த பட்டியலில், இந்தியா 22 ஆவது இடத்தில் உள்ளது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் நாட்டுக்கு முட்டையை இறக்குமதி செய்யும், மற்றுமொரு நாட்டை கண்டறிவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மின் கட்டணத்தை உயர்த்துவதற்கு அமைச்சரவைக்கு அதிகாரமில்லை

கொழும்பு, ஜன. 12

மின்சார சபைச் சட்டம் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் அடிப்படையில், இலங்கை மின்சார சபை, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு அல்லது அமைச்சரவை அமைச்சர்களுக்கு மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அதிகாரம் இல்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்வலு மற்றும் எரிசக்தித்துறை முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தை பாதிக்கும் வகையில் கட்டணத்தை மாற்றுவதற்கு இந்த தரப்புக்களுக்கு அதிகாரம் இல்லை என அவர் கூறினார். எனினும் மின்சாரக் கட்டணத்தை அறிவிப்பதற்கான முழு அதிகாரமும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, பொது கலந்தாய்வை நடத்தி, கட்டணத் திருத்தத்தின் சதவீதத்தை முடிவு செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அரச விசாரணை பட்டியலில் சந்தேக நபராக கோட்டாபய!

கொழும்பு, ஜன. 12

1989 ஆம் ஆண்டு இலங்கையின் மாத்தளையில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் ஜனாதிபதி கோட்டாபய, ஒரு சந்தேக நபராக அரசாங்க விசாரணையின் இரகசியப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ளதாக புதிய அறிக்கை ஒன்று வெளியாகியுள்ளது.

இந்த தகவலை தென்னாபிரிக்காவின் சட்டத்தரணி யஸ்மின் சூக்காவின் சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்ட இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

குறித்த காலத்தில் கோட்டாபய மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தின் அதிகம் அறியப்படாத மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளராக இருந்தார்.

அப்போது குறைந்தது 700 பேர் - முக்கியமாக சிங்களவர்கள் - அவரது கட்டளையின் கீழ் பாதுகாப்புப் படையினரால் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது, ஜேவிபி என்ற மக்கள் விடுதலை முன்னணி சம்பந்தப்பட்ட இரண்டாவது வன்முறைக் காலகட்டமாகும் என்றும் யஸ்மின் சூக்காவின் சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்ட இணையத்தளம் தெரிவித்துள்ளது. (அ)

# பொருளாதார, கலாசார, நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த ஜனாதிபதி 25 வருட திட்டம்

கொழும்பு, ஜன. 12

அடுத்த 25 ஆண்டுகளில் நிறுவப்படும் பல புதிய நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். மேலும், இலங்கையின் சமூக பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் நல்லிணக்கத்தின் முன்னேற்றத்தை உறுதி செய்வதே இதன் இலக்கு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியின் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான வீடுகள் மற்றும் இளைஞர்களுக்கான திட்டங்களும் அடங்கும்.

வரலாற்று, பொருளாதாரம் மற்றும் வர்த்தக நிறுவனம், பெண்கள் மற்றும் பாலின ஆய்வு நிறுவனம், அரச மற்றும் அரச கொள்கைகள் பல்கலைக்கழகம், விவசாய தொழில்நுட்ப, காலநிலை மாற்றம் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகங்கள் அடங்கும்.

மேலும், புதிய சட்டங்களில் தேசிய பெண்கள் ஆணைக்குழு, பாலின சமத்துவ சட்டம், பெண்கள் அதிகாரமளித்தல் சட்டம், குழந்தைகள் பாதுகாப்பு சட்டம், காலநிலை மாற்றங்கள் மீதான சட்டம், சமூக சமத்துவ சட்டம், காடுகளை அழித்தல் மற்றும் வன பாதுகாப்பு சட்டம், நேரடி நிறுவனங்கள் சட்டம் என்பனவும் இதில் அடங்குகின்றது.

**காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி**



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது.
2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன.
அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.
அததோனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராத) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசாரணா: ஈழநாடு

**பக்க வடிவமைப்பாளர் தேவை!**



**பத்திரிகை பக்க வடிவமைப்புக்கு ஆட்கள் தேவை**

**Adobe InDesign, Adobe Photoshop**
**தெரிந்தவர்கள் - பத்திரிகை துறையில் அனுபவம் உள்ளவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.**

விண்ணப்பங்களை
**eelanaduweekly@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது
**ஈழநாடு, இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர்
உளவள துனையாளர் -யாழ் பாவாணன்
07.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்-
சமுர்த்தி உத்தியோகஸ்தர்
7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்
டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.00 மணி : தொடர் நாடகம்
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு
பகல்
12.00 மணி : Jolly Oh Gimgana-நேரலை
1.00 மணி : உதவும் கரங்கள்-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை
இரவு
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய
நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு